# சூழ்ச்சி

(நாடகம்)

★

பெ. தூரன்

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1955.
அமுதம்—94
உரிமை பதிவு

விலை ரூ. 1—0—0

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனும்பேட்டை, சென்னை-18

# சூழ்ச்சி

சித்தூர்க் கோட்டை ரஜபுத்திரர்களின் வீரத்திற்கும் அழியாப் புகழுக்கும் சின்னமாக விளங்குகிறது. அதை ஆண்ட ராணுக்களில் லக்ஷ்மண சிங்கின் மனைவியான பத்மினியின் அழகு பிரசித்தி வாய்ந்தது. அவளைக் கைப்பற்ற விரும்பிய டெல்லி சுல்தான் அலாவுதீனின் முயற்சியும், சித்தூர் முற்றுகையும், எதிர்த்துப் போராடிய ரஜபுத்திரர்களின் சாகசச் செயல்களும் தியாகமும் அனைவருக்கும் தெரிந்தவையே. லக்ஷ்மண சிங்கும், பதினெரு அரசிளங் குமாரர்களும் சண்டையிலே உயிர் துறந்தார்கள். கோட்டை அலாவுதீன் வசமாகுமுன் பத்மினி தீக்குளித்தாள். லக்ஷ்மணசிங் தமது இரண்டாவது மகனை அஜேசிங்கை மட்டும் முன்னதாகவே ஆரவல்லி மலைகளினிடையேயுள்ள காயில்வரத்திற்கு இரகசியமாக அனுப்பியிருந்தார். காயில்வரத்திலிருந்து கொண்டு சித்தூரை மீட்க அஜேசிங் எவ்வளவோ முயன்றும் பயன்கிடைக்கவில்லை. அஜேசிங் தனது தாய் பத்மினிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமலேயே உயிர்விட நேர்கிறது.

இந்தப் பின்னணியைக் கொண்டு சித்தூரின் வரலாற்று நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் தழுவி இந்த நாடகம் உருவாகிறது.

சென்னை
10–2–'55

பெ. தூரன்

ஆசிரியனின் அனுமதி பெற்றே
இந் நாடகத்தை நடிக்கவேண்டும்.

## நாடகத்தில் தோன்றுவோர்

அஜேசிங்
ஹமீர்சிங்
சாந்தசிங்
சேனாபதி
மந்திரி
சந்தாரா தலைவர்
தூதன்
முதல் வீரன்
இரண்டாம் வீரன்
மால்தேவ்
முதல் சித்தூர் வீரன்
இரண்டாம் சித்தூர் வீரன்
சித்தூர் வீரர்கள்
அலாவுதீன்
கமலா தேவி
பாடினி

காயில்வாரம், சித்தூர், சித்தூருக்குச் செல்லும் வழியிலே ஒரு முகாம், டெல்லி ஆகிய இடங்களிலே இந்நாடகத்தின் காட்சிகள் அமைந்துள்ளன.

# சூழ்ச்சி

## அங்கம் ஒன்று—காட்சி ஒன்று

[காயில்வரத்திலே ஒரு நாள் மாலை. ராணா அஜேசிங்கின் மந்திரி தமது இல்லத்திலே கவலையோடு அமர்ந்திருக்கிறார். யாரையோ எதிர்பார்ப்பதுபோல எழுந்து பார்க்கிறார். சேனாபதி வருகிறார்.]

மந்திரி: சேனாபதி, வாருங்கள்—உங்களுக்காகத்தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.

சேனாபதி: அமைச்சரே, எதற்காக இவ்வளவு அவசரமாக என்னை அழைத்தீர்கள்? (*சந்தேகமான தொனியில்*) அரசருடைய நிலைமை......குணமடைந்து கொண்டு தானே இருக்கிறது......?

மந்திரி (*விசனத்தோடு*): இல்லை, சேனாபதி—இனி ராணா அஜேசிங் பிழைத்து எழுந்திருப்பாரென்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லை. அவர் நம் இரண்டு பேரிடத்திலும் முக்கியமான விஷயம் ஏதோ சொல்ல வேண்டுமென்று அவசரமாக அழைத்திருக்கிறார்.

சேனாபதி: இளவரசர் இருவரும் எங்கிருக்கிறார்கள்?

மந்திரி: எல்லோரும் ராணாவின் பக்கத்திலேயேதான் இருக்கிறார்கள். ராணா இந்த வயசிலேயே இறக்கும்படி நேருமென்று நான் நினைக்கவே இல்லை.

சேனாபதி: தந்தைக்கும் தாய்க்கும் வாக்களித்தபடி சித்தூரை மீட்க முடியவில்லையே என்று அவர் சதா கவலையால் மனமுடைந்துவிட்டார். அதுவே அவருடைய ஆயுளைக் குறைத்துவிட்டதென்று நினைக்கிறேன்.

மந்திரி: ராணா தம்மால் ஆனவரை முயற்சி செய்து கொண்டுதான் இருந்தார். ஒரு முறையா இரு முறையா? மூன்று முறை சித்தூரை நோக்கிப் படை எடுத்துச் சென்றார்.

சேனாபதி: ஆமாம்; ராணா தமது வாக்குறுதியை நிறைவேற்ற எல்லா முயற்சியும்தான் செய்தார். உயிரை மதியாமல் போரும் செய்தார். ஆனால் நான்தான் அவருக்கு வெற்றியளிக்கக்கூடிய திறமையுள்ள சேனாபதியாக இருக்கவில்லை. குற்றமெல்லாம் என்னுடையதுதான்.

மந்திரி: சேனாபதி, நான் உங்களிடம் குறை காண்பதாக நினைக்கக்கூடாது. நீங்கள் அற்புதமாகச் சண்டை செய்தீர்கள். நமது ரஜபுத்திர வீரர்களும் உங்களுடைய சாகசச் செயல்களைக் கண்டும், வீர கோஷத்தைக் கேட்டும் பரவசமடைந்து உங்கள் ஆணைப்படி போரிட்டார்கள். அதில் சந்தேகமே இல்லை.

சேனாபதி (முகவாட்டத்தோடு): ஆனால் வெற்றிதான் கிடைக்கவில்லை.

மந்திரி: அதற்கென்ன செய்யலாம்? சித்தூரைக் காப்பதற்கு நமது சேனையைப் போலப் பத்து மடங்கு பெரிய சேனை இருக்கிறது. அலாவுதீன் அந்த நகரத்தைத் தன் கைவசம் வைத்துக் கொள்வதற்காக எத்தனையோ பெரிய ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறான். சித்தூர்க் கோட்டைச் சுவர்களின் பலமும் அவனுக்கு உதவியாக இருக்கிறது.

சேனாபதி : அந்த மால்தேவ் தானும் ஒரு ரஜபுத்திரன் என்பதையே மறந்துவிட்டு அந்நியனுக்கு அடிமையாகி அவன் சொன்னபடியெல்லாம் ஆடிக் கொண்டிருக்கிறான்.

மந்திரி : இல்லாவிட்டால் அவன் சித்தூருக்கு அதிபதியாக இருக்க முடியுமா?

சேனாபதி : நாய்க்கு முன்னால் எலும்புத்துண்டைப் போட்டால் அது வாலைக் குழைத்துக் கொண்டுதான் கிடக்கும்.

மந்திரி : நாயின் பிழைப்பென்றாலும் சித்தூர்க் கோட்டைக்கு ராஜப் பிரதிநிதியல்லவா? டெல்லி சுல்தானுடைய ராஜப் பிரதிநிதி என்ற பதவியைவிட மால்தேவுக்கு வேறென்ன வேண்டும் ?

சேனாபதி (கோபமாக) : அவனுடைய ராஜப் பிரதிநிதிப் பெருமையைச் சிதறடிக்காமலா நான் சாகப் போகிறேன் ?

மந்திரி : சேனாபதி, அதைப்பற்றி இப்பொழுது ஆத்திரப்படாதீர்கள். மால்தேவைப் பழிவாங்குவதற்குச் சமயம் வராமலா போகிறது? அப்பொழுது அதை நினைக்கலாம். இப்பொழுது முதலில் நாம் நமது ராணாவைப் பற்றி நினைக்க வேண்டியிருக்கிறது.

சேனாபதி : இனிமேல் அஜேசிங்கின் தலைமையில் நமது சைனியத்தைப் போர்க்களத்திற்கு ஏவுகின்ற பாக்கியம் எனக்கு இல்லை போலிருக்கிறது.

மந்திரி : அவருடைய பூதவுடல் மறைந்து விட்டாலும் அவருடைய ஆன்மா நமது சைனியத்தோடு சதா இருந்து கொண்டுதானிருக்கும். சித்தூரை மீட்குமுன்னால் அவர் ஆன்மா சாந்தியடையாது.

சேனாபதி (மெதுவாக): யார் அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வருவார்?

மந்திரி: ஏன், அவருக்கு மகனில்லையா என்ன?

சேனாபதி: அது எனக்குத் தெரியாதா? இருந்தாலும் ராணாவின் உத்தேசம் என்னவோ?

மந்திரி: அதைப் பற்றித்தான் அவர் எல்லோர் முன்னிலையிலும் கூறப் போகிறார். நம்மை அழைத்திருப்பதும் அதற்காகத்தான்...வாருங்கள் ராணாவைப் பார்க்கப் போவோம்.

[இருவரும் புறப்படுகிறார்கள்.]

சேனாபதி: ராணாவுக்கே தாம் இனிப் பிழைக்க முடியாதென்று தெரிந்துவிட்டதோ?

மந்திரி: ஆமாம். அப்படித்தான் அவரே என்னிடம் சொன்னார்.

[பேசிக்கொண்டே போகிறார்கள்.]

திரை

## காட்சி இரண்டு

[இருள் பரவத் தொடங்கிவிட்டது. ராணா அஜேசிங் மஞ்சத்தில் படுத்திருக்கிறார். இறக்கும் தறுவாயிலும் அவர் முகத்தில் உறுதி தாண்டவமாடுகிறது. சித்தூரை மீட்க முடியாது போனதால் ஏற்பட்ட மனக் கவலையும் அதில் தோன்றுகிறது. ராணாவின் மகன் சாந்தசிங்கும், அண்ணன் அரிசிங்கின் மகன் ஹமீர்சிங்கும், மந்திரி, சேனாபதி முதலியவர்களும் கவலையோடு அருகே அமர்ந்திருக்கிறார்கள். விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.]

அஜேசிங் (*ஹீனக்குரலில்*) : மந்திரி பிரதானிகளே, நான் இறந்து போவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் சித்தூரை மீட்க முடியாமல் போய்விட்டதே என்றுதான் தீராத கவலையாக இருக்கிறது. எனது தாய் பத்மினிக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற என்னால் முடியவில்லை......ஹமீர்சிங்......எங்கே அவன்?

[ஹமீர்சிங் எழுந்து அருகே செல்கிறான்.]

ஹமீர், என் அருகிலே வா...உனக்கு ஒரு விஷயம் முக்கியமாகச் சொல்லவேண்டும்...அலாவுதீன் சித்தூரை முற்றுகையிட்டபோது எனது தந்தை லக்ஷ்மணசிங் ஏதோ ஒரு காரணத்தால் அலாவுதீனை எதிர்த்துப் போரிட என்னை மட்டும் அனுப்பவில்லை. மற்ற என் தம்பியரும் என் அருமை அண்ணன் ஊர்சிங்கும் சண்டையில் மாண்டார்கள்...தந்தையும் மாண்டார். என்னை மட்டும் இந்தக் காயில்வரத்திற்குப் பத்திரமாக அனுப்பினார்கள். நான் காயில்வரம் வந்து அரசனானேன்...நமது வம்சம் அழியக்கூடாது என்பதற்காகவே நான் ராணாவானேன்...ஆனால் அரசுரிமை உண்மையில் உனக்கே உரியது...நீதான் மூத்த மகனாகிய என் அண்ணன் ஊர்சிங்கின் புத்திரன். அதனால் உன்னையே நான் ராணாவாக்குகிறேன்...ஹமீர், சாகும்தறுவாயில் நான் உன்னை ஒன்று கேட்கிறேன். சத்தியம் செய்து கொடுப்பாயா?

ஹமீர்சிங் : சிறிய தந்தையே, தாங்கள் என்னை ராணாவாக்கியதால் மட்டும் நான் தங்கள் ஆணையை ஏற்றுக் கொள்வதாகக் கருதவேண்டாம். என்றும் நான் தங்கள் ஆணையைத் தட்டியதில்லை. இனிமேலும் எனது கடைசி மூச்சு உள்ளவரையும் தங்கள் விருப்பப்படியே நடப்பேன். இது சத்தியம்.

சேனபதி : நமது நோக்கம் வெறும் தொல்லை கொடுப்பது மட்டுமல்ல. ஆனல் சித்தூரை மீட்பதற்கு நம்மிடம் போதிய படை பலம் இன்னும் ஏற்படவில்லையே?

ஹமீர்சிங் : அது என்றைக்கும் ஏற்படாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆரவல்லி மலைக்குள்ளே நமக்கு எப்படி லக்ஷக்கணக்கான வீரர்கள் கிடைக்கப் போகிருர்கள்? மந்திரி, உங்கள் அபிப்பிராயமென்ன?

மந்திரி : அரசே, நமது படையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சுத்த வீரர் என்பதில் சந்தேகமில்லை. தாங்கள் உத்தரவிட்டால் என்ன வேண்டுமானலும் செய்யத் தயாராக இருக்கிருர்கள். ஆனல் மால்தேவின் படை பலத்தை எண்ணிப் பார்த்து நாம் காரியம் செய்ய வேண்டும். நமது படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப் புது உபாயம் தேடவேண்டும்.

ஹமீர்சிங் : மந்திரி, நமது வீரத்தைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்ள நான் இஷ்டப்படவில்லை. காயில்வரம் என்ற இந்தச் சிறு நாடு மலைகளின் மத்தியிலிருக்கிறது. அதனல் பயமின்றி இதில் மறைந்திருந்து கொண்டு வீரம் பேசுகிருேம். இதுவா வீரம்?

சேனபதி : ராண, தாங்கள் விரும்பினல் இப்பொழுதே சித்தூரை நோக்கிப் படையை நடத்த நான் தயார். இங்கே கூடியுள்ள நமது நண்பர்களின் முன்னல் தங்கள் உள்ளக் கருத்தை உடனே கூறுங்கள்.

ஹமீர்சிங் : நான் பல நாட்களாக யோசனை செய்து ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். அதைக் கூறவே உங்கள் அனைவரையும் அழைத்தேன். நமது நண்பரும் உறவினருமான சந்தாரா தலைவரும் வந்திருப்பது எனக்கு ஊக்கமளிக்கிறது. இவ்வாறு இந்த மலை நாட்டிலே ஒளிந்து கொண்டிருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

எனது சிறிய தந்தை அஜேசிங்கிற்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் கழிக்கும் ஒவ்வொரு நாளும் எனக்கு மரண வேதனையாக இருக்கிறது. நாம் உடனே சித்தூரை எதிர்த்துச் செல்லவேண்டும். வெற்றி கிடைத்தால் நமக்குப் பெரும் புகழ் வரும். அல்லது தோல்வியென்றால் அத்தனைபேரும் சித்தூர்க் கோட்டையின் முன்னால் பலியாவோம். மறுபடியும் திரும்பிவருகிற தென்பதை யாரும் கனவிலும் கருதக்கூடாது.

மந்திரி : தாங்கள் ராணா அஜேசிங்கிற்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற விரும்புகிறீர்களா? அல்லது கடமையைச் செய்ய முயன்றதாகப் பெயர் ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா ?

ஹமீர்சிங் (கோபமாக) : மந்திரி, அந்த வாதமெல்லாம் எனக்குத் தெரியும். வெற்றியடைவதற்கு வழிசெய்து கொண்டிருப்பதாகச் சாவு என்னைத் தேடிக்கொண்டு வரும் வரையில் நான் என்னையே ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.

சேனாபதி : தாங்கள் யாரையும் ஏமாற்றவில்லையே? தகுந்த சமயத்திற்காகத்தானே காத்திருக்கிறீர்கள்?

ஹமீர்சிங் (ஆத்திரத்தோடு) : நான் யாரையும் ஏமாற்றவில்லையா? சித்தூருக்காகத் தனது பதினொரு வீரமக்களையும் அருமைக் கணவனையும் பலிகொடுத்த அந்த வீரப் பத்மினியின் அழகுருவம் அதோ அந்தப் படத்திலே கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அது என்னைப் பார்த்துக் கேலி செய்வது போலிருக்கிறதே. அவர்கள் வீழ்ந்து மடிந்த அந்தப் பெரு நெருப்பின் வெப்பம் தணியும் முன்பல்லவா நாம் சித்தூரை மீட்டிருக்க வேண்டும்?

மந்திரி : அந்தப் பொறுப்பு ராணா அஜேசிங்கைச் சார்ந்திருந்தது; தங்களுக்கு......

ஹமீர்சிங் (கோபமாக) : ராணு அஜேசிங்கைச் சேர்ந்த தென்றல் நமக்கும் அது கிடையாதா? அவருக்கும் நீங்கள் இந்தமாதிரி யோசனை கூறித்தான் சித்தூரை மீட்க முடியாமற் செய்திருப்பீர்கள். அவர் மன முடைந்து இறந்ததைக் கண்டும் உங்களுக்கு ரோஷம் பிறக்கவில்லையா ?

சேனுபதி : ராணு, தாங்கள் யோசனை கூறும்படி கேட்ட தால் உள்ள நிலைமையை வெளிப்படையாக எடுத் துரைத்தோம். அதனுல் நாங்கள் போரிட விரும்பவில்லை என்பதாகாது. ஆணையிட்டால் உடனே புறப்படுகிறோம்.

ஹமீர்சிங் : சேனுபதி, இந்த வார்த்தைதான் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. மாமா, தங்களுக்கும் இது சம்மதந் தானே? நீங்கள் ஏன் ஒன்றும் கூறுமல் மௌனம் சாதிக் கிறீர்கள்?

சந்தாரா தலைவர் : ராணு ஹமீர்சிங், உன்னுடைய வீரத் துடிப்பும் ஆவேசமும் என்னைக் குதூகலிக்கும்படி செய் கின்றன. ராணு லக்ஷ்மண சிம்மனின் அதிபராக்கிரம ரத்தம் உன் உடம்பிலே ஓடிக்கொண்டிருப்பதை நான் அறிவேன். அது மட்டுமா? என் தங்கை வயிற்றிலே பிறந்தவன் நீ. அவளை உன் தந்தை மணந்த காரணம் இங்குள்ளவர்களுக்குத் தெரியுமோ என்னவோ? ஒருநாள் உன் தந்தை ஊர்சிங்கும் இன்னும் சில இளைஞர்களும் காட்டிலே வேட்டையாட வந்தார்கள். அவர்கள் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக்கொண்டு போகும்போது அது என் தங்கை கிளியோட்டிக்கொண்டிருந்த புனத் திற்குள்ளே புகுந்தது. என் தங்கை தன் கையில் வைத் திருந்த மூங்கிற் கோலாலேயே அதைக் குத்திக் கொன் ருள். அந்த வீரச் செயலைக்கண்டு ஊர்சிங் அவளையே மணக்க வேண்டுமென்று ஆசைகொண்டான். அவளுக்

குப் பிறந்த மைந்தன் சித்தூரை மீட்கும் ஆற்றலும் துணிச்சலும் கொண்டிருப்பானென்பதில் ராணு அஜே சிங்கிற்கும் நம்பிக்கை ஏற்பட்டது. அப்படிப்பட்ட மைந்தனுகிய நீ சித்தூரை எதிர்த்துச் செல்ல ஆத்திரப் படுவதில் ஆச்சரியமில்லை. ஆனால் ஆத்திரம் வெற்றி யளிக்காது. அவசரத்தால் நமது நோக்கம் நிறைவேரு மல் எல்லோரும் மரணமடைய நேரிட்டால் நமது வம்சத் திற்கே அது கேவலமாக முடியும்.

சாந்தசிங் : மாமா, அண்ணனை வெகுவாகப் புகழ்ந்து விட்டுக் கடைசியில் போருக்குப் போகவேண்டாமென ஆலோசனை கூறுகிறீர்களே?

சந்தாரா தலைவர்: சாந்தசிங், நீயும் சித்தூர்க் கோட்டை யின் முன்னுலே பலியாக வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிருய் என்பது எனக்குத் தெரியும். ஆனுல் அதுவல்ல நமதுநோக்கம். நம்மிடமிருக்கும் வீரர்களையும் இழந்துவிட்டுப் பிறகு......

ஹமீர்சிங் : மாமா, உங்களுடைய உள்ளக்கருத்தை நான் அறிந்துகொண்டேன். என் தாயைப்பற்றித் தாங்கள் கூறியசெய்தி என்னைப் புளகாங்கிதமடையச் செய்கிறது. ஆனுல்...

[சேவகன் ஒருவன் மந்திரி அருகில் வந்து ஏதோ அறிவிக்கிருன்.]

மந்திரி : ராணு, ஒரு முக்கியமான விஷயம்...சித்தூரி லிருந்து தூதன் ஒருவன் வந்திருக்கிருன். தங்களைக் காண்பதற்காக வாயிலில் காத்திருப்பதாகச் சேவகன் அறிவிக்கிருன்.

ஹமீர்சிங் (ஆச்சரியத்தோடு) : சித்தூரிலிருந்தா தூதன் வந்திருக்கிருன்? மால்தேவிற்கு நம்மிடத்திலே என்ன

வேலையிருக்கிறது? அவனோடு போர்க்களத்திலல்லவா நாம் பேசவேண்டும்?

மந்திரி : தூதனுடைய வருகையைப் பார்த்தால் போரை அவன் விரும்புவதாகத் தெரியவில்லை. ஏதோ வேறு காரியம் என்று தோன்றுகிறது.

ஹமீர்சிங் : மந்திரி, எதற்கும் தூதனை உடனே இங்கு வரவழையுங்கள். அவன் வாயிலாகவே விஷயத்தை அறிவோம்.

[சேவகன் வெளியே சென்று தூதனோடு நுழைகிறான்.]

தூதன் : ராணா ஹமீர்சிங்குக்கு எனது வணக்கம். சித்தூரின் அதிபதியாகிய மால்தேவ் தங்களுக்கு அவருடைய வாழ்த்துரைகளைக் கூறுமாறு என்னைப் பணித்துள்ளார்கள்.

ஹமீர்சிங் (ஏளனமாக) : அப்படியா? அந்நியனுக்கு அடிப் பணி புரியும் யாரிடமிருந்தும் வாழ்த்துரை ஏற்றுக் கொள்ள ராணா லக்ஷ்மணசிங்கின் வம்சம் தயாரில்லை என்பதை அந்த மால்தேவிற்குப் போய்ச் சொல். இதற்காகவா உன்னை அவன் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு இங்கு அனுப்பினான்?

தூதன் : ராணா, என்னை அவர் அனுப்பியதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. மால்தேவ் தங்களுக்குத் தேங்காய் தாம்பூலப் பரிசு அனுப்பியிருக்கிறார். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள விருப்பமா என்று அறிய நான் வந்திருக்கிறேன்.

ஹமீர்சிங்: தேங்காய்ப் பரிசா? அவன் என்னுடன் உறவு கொண்டாடக் கனவு கண்டுகொண்டிருக்கிறானா? பேஷ்! அவன் புத்தி சுவாதீனத்தோடுதானே இருக்கிறான்?

மந்திரி: ராணு, மால்தேவ் தங்களுக்குத் தேங்காய்ப் பரிசு அனுப்பியிருப்பதில் ஏதோ சூழ்ச்சியிருக்கின்றது.

ஹமீர்சிங்: இதில் சூழ்ச்சி என்ன இருக்கிறது? தேங்காய்ப் பரிசை நான் ஏற்றுக்கொண்டால் அவனுடைய மகளை நான் மணந்து கொள்ள இசைகின்றேன் என்று சம்மதம் கொடுத்ததாகிவிடும். அதுதானே விஷயம்?

மந்திரி: ஆமாம், அவ்வாறு தம்முடைய மகளை உமக்கு விவாகம் பண்ணிவிட்டால் பிறகு நீங்கள் அவரோடு சண்டையிட நினைக்கமாட்டீர்கள்.

சேனுபதி: பிறகு மால்தேவ் நிம்மதியாகச் சித்தூரை ஆண்டுகொண்டு அந்த அந்நியன் அலாவுதீன் கில்ஜிக்குத் தொங்கு சலாம் போட்டுக்கொண்டிருக்கலாம். அவன் தொல்லையெல்லாம் தீர்ந்து போகும்.

ஹமீர்சிங் (ஏளனமாக): நான் என் சிறிய தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மால்தேவின் மகளோடு மானமின்றிக் கூடிக் குலாவிக் கொண்டிருப்பேன், அப்படித்தானே?

சேனுபதி: ராணு, தாங்கள் அப்படிச் செய்வீர்களென்று நான் ஒரு போதும் குறிப்பிடவில்லை.

ஹமீர்சிங் (சிரித்துக்கொண்டு): சேனுபதி, உங்கள்மீது ஏதோ குற்றம் கண்டுபிடிப்பதாக நினைக்கவேண்டாம். இருந்தாலும் ஒரு ரஜபுத்திரன் இந்த நிலைமையிலே என்ன செய்யவேண்டும் என்று நன்ருக எண்ணிப் பார்க்க வேண்டாமா? மந்திரி, உங்கள் யோசனை என்ன?

மந்திரி: இதில் யோசனை என்ன இருக்கிறது? வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகும்படி தூதனை உடனே அனுப்ப வேண்டியதுதான்.

மந்திரி : ராணா, மால்தேவ் தங்களுக்குத் தேங்காய்ப் பரிசு அனுப்பியிருப்பதில் ஏதோ சூழ்ச்சியிருக்கின்றது.

ஹமீர்சிங் : இதில் சூழ்ச்சி என்ன இருக்கிறது? தேங்காய்ப் பரிசை நான் ஏற்றுக்கொண்டால் அவனுடைய மகளை நான் மணந்து கொள்ள இசைகின்றேன் என்று சம்மதம் கொடுத்ததாகிவிடும். அதுதானே விஷயம் ?

மந்திரி : ஆமாம், அவ்வாறு தம்முடைய மகளை உமக்கு விவாகம் பண்ணிவிட்டால் பிறகு நீங்கள் அவரோடு சண்டையிட நினைக்கமாட்டீர்கள்.

சேனாபதி : பிறகு மால்தேவ் நிம்மதியாகச் சித்தூரை ஆண்டுகொண்டு அந்த அந்நியன் அலாவுதீன் கில்ஜிக்குத் தொங்கு சலாம் போட்டுக்கொண்டிருக்கலாம். அவன் தொல்லையெல்லாம் தீர்ந்து போகும்.

ஹமீர்சிங் (ஏளனமாக) : நான் என் சிறிய தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு மால்தேவின் மகளோடு மானமின்றிக் கூடிக் குலாவிக் கொண்டிருப்பேன், அப்படித்தானே?

சேனாபதி : ராணா, தாங்கள் அப்படிச் செய்வீர்களென்று நான் ஒரு போதும் குறிப்பிடவில்லை.

ஹமீர்சிங் (சிரித்துக்கொண்டு) : சேனாபதி, உங்கள்மீது ஏதோ குற்றம் கண்டுபிடிப்பதாக நினைக்கவேண்டாம். இருந்தாலும் ஒரு ரஜபுத்திரன் இந்த நிலைமையிலே என்ன செய்யவேண்டும் என்று நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டாமா ? மந்திரி, உங்கள் யோசனை என்ன?

மந்திரி : இதில் யோசனை என்ன இருக்கிறது? வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகும்படி தூதனை உடனே அனுப்ப வேண்டியதுதான்.

அஜேஜசிங்கின் தலைமையில் நமது சேனை சித்தூரைத் தாக்கிய ஒரு சமயத்தில் அவன் அம்பு பட்டு மடிந்தானும்...மகள் மட்டும் இப்பொழுது இருக்கிறாள்.

சந்தாரா தலைவர்: ஓகோ அப்படியா? சரி சரி. அவன் இப்பொழுது பெண் கொடுத்து உன்னைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ளப் பார்க்கிறான்.

ஹமீர்சிங்: நான் அப்படி நினைக்கவில்லை. அவனுக்கு ஒரே பெண்தான் உண்டு என்றால் அவனுக்குப் பிறகு சித்தூரின் அரசுரிமை எனக்கு வருமாறு செய்வதை அந்த அலாவுதின் சம்மதிப்பானா? அவனுடைய சம்மதமில்லாமல் மால்தேவ் இந்தக் காரியத்தை நினைத்திருக்க முடியுமா ?

சேனாபதி: சித்தூரின் அரசுரிமை தங்களுக்கு வந்தாலும் நீங்கள் அலாவுதீனின் பிரதிநிதியாகத்தானே இருக்க வேண்டும்? அப்படி இருக்கவேண்டுமென்றுதான் அவன் கனவு கண்டுகொண்டிருக்கிறான்.

சந்தாரா தலைவர்: நீண்ட காலமாக இந்தச் சூழ்ச்சி தானே நடக்கிறது? எப்படியாவது சித்தூர் ராணாவைத் தமது வசம் திருப்பவேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். இதுவரை அது பலிக்கவில்லை. ஆனால் இந்தத் தந்திரம் இன்று மாத்திரம் பலிக்கவா போகிறது?

ஹமீர்சிங்: சித்தூரிலே ராஜப் பிரதிநிதியாக இருக்கும் உரிமை கிடைத்தால் பிறகு அதை உபயோகப்படுத்திக் கொண்டு அலாவுதீனுக்குப் பணிய மறுத்துவிட்டால் என்ன செய்வதென்று அவன் யோசித்திருக்கக் மாட்டானா? சித்தூருக்குள்ளே நம்மை நுழைய வைத்து விட்டுப் பிறகு சித்தூர் தன்னுடையதாக இருக்குமென்று அவன் நினைக்கமாட்டான். நீங்கள் எண்ணுவது சரியில்லை என்று எனக்குப் படுகிறது.

சந்தாரா தலைவர் : சொந்தம் ஏற்படுத்திக்கொண்டால் பிறகு எப்படியாவது வசப்படுத்திவிடலாம் என்றுதான் நினைப்பார்கள். சுல்தான்களுடைய தர்பாரின் ஆடம்பரங் களுக்கும், குடி கூத்து முதலிய கவர்ச்சிகளுக்கும் எத் தனையோ ரஜபுத்திரர்கள் அடிமையாகியிருக்கிறார்கள்; இன்றும் அடிமையாகிக்கொண்டிருக்கிறார்கள்.

ஹமீர்சிங் : மாமா, என்னையும் அவ்வளவு கேவல மாகவா நினைக்கிறீர்கள்? அஜேசிங்கிற்குக் கொடுத்த வாக்கை மறந்துவிடுவேனென்று நீங்கள் சந்தேகப் படுகிறீர்கள் ?

சந்தாரா தலைவர் : பெண்களின் வலையில் விழுந்தவன் எதை வேண்டுமானாலும் மறந்துவிடுவான்.

மந்திரி : ராணா, மால்தேவ் தனது பெண்ணையே உப யோகப்படுத்தி உங்களை மயக்க நினைத்திருக்கிறான். நம் முடைய நோக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டும் வெட்கம் மானமின்றித் தேங்காய்ப் பரிசு அனுப்பு கிறவன் என்ன வேண்டுமானாலும் செய்வான்.

ஹமீர்சிங் : மந்திரி, நீங்கள் மால்தேவைப் பற்றி நினைப் பது சரியாக இருக்கலாம். ஆனால் என்னை நீங்கள் யாரும் சரியாக அறிந்துகொண்டதாகவே தெரியவில்லை. நான் அவ்வளவு எளிதில் அவர்கள் வசப்பட்டுவிடுவேன் என்று நீங்கள் தீர்மானிப்பது என்னை அவமரியாதை செய்வது போலாகும்.

சேனாபதி : ராணா, தங்கள் சேனையின் தலைவன் என்ற முறையில் நான் ஒன்று இந்தச் சமயத்தில் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மண விஷயம் தெரிந்தால் நமது வீரர்கள் அதைச் சிறிதும் வரவேற்கமாட்டார்கள். எதிரிக்கு நாம் பணிந்துவிட்டதாகவே எண்ணுவார்கள்.

ஹமீர்சிங் (கோபமாக): சேனைபதி, என்னைப் பயமுறுத்தப் பார்க்கிறீர்களா? சித்தூரை எதிர்த்துப் போருக்குச் செல்லலாம் என்றால் படை பலம் போதாது என்கிறீர்கள். வேறு வழியிலே சித்தூரை மீட்க மால்தேவின் இந்தச் சூழ்ச்சியையே பயன்படுத்தலாமா என்றால் அதுவும் கூடாது என்கிறீர்கள். காயில்வரத்தின் மலைக் காற்று உங்களுக்கு இன்பமளிப்பதாகத் தெரிகிறது. நீங்கள் அனைவரும் இங்கேயே சுகமாக இருங்கள். நான் அந்தத் தேங்காய்ப் பரிசை ஏற்றுக்கொண்டு சித்தூருக்குத் தனியாகச் செல்லுகிறேன்.

சந்தாரா தலைவர்: ஹமீர், நீ இவ்வாறு ஆத்திரமும் கோபமும் கொள்ளுவது நல்லதல்ல. சற்று முன்னேதான் சித்தூரை எதிர்த்துப் போரிட உடனே படையெடுத்துச் செல்லவேண்டுமென்று கூறினாய். இப்பொழுது தனியாக மணமகனாகப் போகவேண்டுமென்கிறாய். அரசாட்சியை வகிக்கும் ஒருவருக்குப் பொறுமையும் நிதானமும் வேண்டும்.

ஹமீர்சிங்: மாமா, என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும். நான் அவசரப்பட்டு எதையும் முடிவு செய்துவிடவில்லை. போரிட்டுச் சித்தூரை வெல்ல இது சமயம் முடியாதென்று சேனைபதியும் மந்திரியும் நினைக்கிறார்கள். அந்த நினைப்போடு அவர்கள் தலைமையில் போர் நடந்தாலும் வெற்றி என்பது என்றுமே கிடைக்காது. ஆதலால் வேறு வழியை நான் நாட முயலுகிறேன்.

சந்தாரா தலைவர்: இதுவா வேறு வழி? இது புலியின் கூண்டிற்குள்ளே நாமாகவே சென்று சிக்கிக்கொள்ளுகிற வழியல்லவா? அதைத்தான் அவர்கள் வேண்டாமென்று தடுக்க விரும்புகிறார்கள்.

**ஹமீர்சிங் :** மால்தேவ் உண்மையிலேயே எனக்குப் பெண் கொடுக்க விரும்புகிறுனென்று நான் கருதவில்லை. என்னவோ சூழ்ச்சியை மனத்தில் வைத்துக்கொண்டு என்னைச் சித்தூருக்குள் வரவழைப்பதற்கு இந்த ஏற்பாடு செய்திருக்கிறுன். அந்தச் சூழ்ச்சியையே பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று நான் முடிவு செய்துவிட்டேன். தாம்பூலப் பரிசை ஏற்றுக்கொள்ள மறுப்பது ரஜபுத்திர வீரனுக்கு அழகல்ல. மால்தேவ் உண்மையில் பெண்ணைக் கொடுத்தாலும் நான் அவனிடம் உறவு கொண்டு காலங்கழிக்கமாட்டேன். இது சத்தியம்.

**சந்தாரா தலைவர் :** சாந்தசிங், ஏன் மௌனமாக இருக்கிறுய்? அண்ணன் கூறுவது உனக்கும் சம்மதந்தாஞு?

**சாந்தசிங் :** இன்றுள்ள நமது படை நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது அண்ணன் கூறும் துணிச்சலான உபாயந்தான் நல்லதென்று எனக்கும் தோன்றுகிறது. மால்தேவின் சூழ்ச்சியையே பயன்படுத்திக்கொண்டு சித்தூரை மீட்க முயலுவோம். சும்மா கிடப்பதைவிட இப்படி ஏதாவது துணிந்து செய்வது எனக்குப் பிடிக்கிறது.

**சந்தாரா தலைவர் :** சாந்தசிங், நீ அண்ணனுக்குச் சரியான தம்பி.

**மந்திரி :** ராஞு, தங்களுடைய முடிவான தீர்மானம் இதுதாஞு?

**ஹமீர்சிங் :** ஆமாம், அந்தத் தூதனிடம் நான் தேங்காய் தாம்பூலப் பரிசை ஏற்றுக் கொள்ளுவதாகக் கூறி நாளைக்கு நமது சபைக்கு அழைத்து வாருங்கள்...... சித்தூரை நோக்கி நாம் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் கவனியுங்கள்....

சேனுபதி : நமது சேனைகளெல்லாம் கூடவே புறப்பட வேண்டுமா?

ஹமீர்சிங் : வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட இரு நூறு வீரர்களோடு நீங்கள் என்னுடன் வரவேண்டும். நாம் சித்தூருக்குச் செல்லுங்காலத்திலே தம்பி சாந்த சிங் எனக்குப் பதிலாக அரச பதவி வகிக்கட்டும். நாம் புறப்பட்ட இரண்டு தினங்களுக்குப் பிறகு அவன் நமது படைகளோடு சித்தூரை நோக்கி வந்து வெளியிலே தங்கியிருக்கட்டும்... உள்ளே ஏதாவது எதிர்பாராத சூழ்ச்சி நடந்தால் உடனே சித்தூரைத் தாக்குவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

சந்தாரா தலைவர் : ஹமீர், இதுவே உனது தீர்மான மென்ருல் நான் இனிமேலும் அதற்குத் தடை சொல்ல விரும்பவில்லை. இளமையின் துணிச்சலோடு நீ இந்தக் காரியத்தை எண்ணியிருக்கிருய். உன் தாயும் இப்படித் தான் நடந்து வந்தாள்...

ஹமீர்சிங் : நான் என் தாய்க்குச் சரியான பிள்ளைதானே மாமா?...சரி, அதிருக்கட்டும். உங்களுடைய உத்தேசம் என்ன ? என்னுேடு சித்தூருக்கு வருகிறீர்களா ?

சந்தாரா தலைவர் : நீ கல்யாண மாப்பிள்ளையாக வீற் றிருப்பதைப் பார்க்க எனக்கு இப்பொழுது ஆசை யில்லை. நான் எனது வீரர்களோடு சாந்தசிங்குக்குத் துணையாக வருகிறேன்.

ஹமீர்சிங் : அதுவேதான் என் விருப்பமும். மால்தேவ் ஏதாவது சூழ்ச்சி செய்தால் அதற்குப் பழிவாங்க நீங்கள் என் தம்பிக்கு உதவியாக இருக்கவேண்டும். சித்தூரி லிருந்து ஒற்றர்களின் மூலம் உங்களுக்கு நான் தினமும் சேதி அனுப்புகிறேன்... இப்போது சபை கலையலாம்.

இரவிலே இதுபற்றி மேலும் கலந்தாலோசித்துத் திட்டம் வகுப்போம்.

[ஹமீர்சிங் எழுந்திருக்கிறான். எல்லோரும் எழுந்திருக்கிறார்கள்.]

திரை

## காட்சி நான்கு

[ஹமீர்சிங் சித்தூருக்குப் போகும் வழியில் ஓரிடத்திலே இரவைக் கழிப்பதற்காகத் தண்டிறங்கியிருக்கிறான். மாலை நேரம். இரண்டு வீரர்கள் முன்னால் காவல் காத்து நிற்கின்றனர். பின்னால் சற்றுத் தூரத்திலே ராணா, மந்திரி, சேனாபதி முதலியோரின் கூடாரங்கள் தென்படுகின்றன. பாடினி ஒருத்தி காவல் வீரர்களின் முன் ஆடிக்கொண்டே பாடுகிறாள்.]

பாடினி : [பாட்டு]

காற்றிலேறி வருவோம்—நாங்கள்
கடலைச் சுற்றி வருவோம்

ஆற்றிலாடி வருவோம்—நாங்கள்
அலையிலேறி வருவோம்

வீரவாழ்க்கை யெல்லாம்—பாடி
மேன்மை யூட்ட வருவோம்

சாரமற்ற வாழ்வைக்—கண்டால்
சாடிமோத வருவோம்

பாட்டும் பண்ணும் கூட—நாங்கள்
பாடியாடி வருவோம்

நாட்டு மாந்தர்க்கெல்லாம்—என்றும்
நல்ல வாழ்வு சொல்வோம்

**முதல் வீரன் :** அடே—நீ யாருன்னு கேட்டா சும்மா என்னமோ பாடவும் ஆடவும் ஆரம்பிச்சுட்டியே ?

**இரண்டாம் வீரன் :** கேட்ட கேள்விக்கு ஜவாப்—சும்மா அந்தப் பாட்டைப் பாடி எங்களை மயக்க முடியாது. என்ன தெரிஞ்சுதா?

**பாடினி :** ஐயா, நீங்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொன்னேன்.

**முதல் வீரன் :** என்ன—பாட்டுத்தான் பதிலா ? நீ யாருன்னு கேட்டா அதுக்கு என்னமோ ராகம் இழுக்கிறயே ?

**பாடினி :** பாட்டுப் பாடுவதே என்னுடைய தொழில்... என்னைப் பாடினி என்று சொல்லுவார்கள்...

**இரண்டாம் வீரன் :** சரி சரி. அதுதான் பாட்டிலேயே பதில் வெளுத்து வாங்கரயாக்கும் ? ஆமா, இங்கே ஆம்பளைகள் இருக்கிற பக்கம் நீ என்னத்துக்கு வந்தே? இதெல்லாம் யாருன்னு உனக்குத் தெரியுமா ?

**பாடினி :** ஓ நன்றாகத் தெரியும். ராணா ஹமீர்சிங் கல்யாணம் பண்ணிக்கச் சித்தூருக்குப் போகிறார். நீங்கள் எல்லாம் அவருடைய வீரர்கள்—கூட வந்திருக்கிறீர்கள். எல்லாம் எனக்குத் தெரியும்.

**இரண்டாம் வீரன் :** ஆமா, நாங்க ஏன் இங்கே தங்கியிருக்கிறோமென்று உனக்குத் தெரியுமா? ராணா கல்யாணத்துக்குப் போகிறபோது இங்கே தங்குவானேன்?

**பாடினி :** அடே, இதுகூடத் தெரியாதா ? மாலை நேரம் ஆயிட்டுது. இன்னும் கொஞ்சநேரத்திலே கருகும்மென்று இருட்டிப் போகும். அதுக்காக இங்கே முகாம் இறங்கிக் காலையிலே புறப்படப் போகிறீர்கள்.

**இரண்டாம் வீரன் :** அதுகூட உனக்குத் தெரியுமா ? பிறகு நீ எதுக்கு இங்கே வந்தாய் ?

**பாடினி :** நான் ராஜுவைப் பார்க்க வேணும்...நீங்க ஏற்பாடு செய்வீர்களா ?

**முதல் வீரன் :** ராஜுவுக்குத்தான் பொண்ணு அங்கே சித்தூரிலே காத்திருக்குதே ? நீ எதற்கு அவரைப் பார்க்கிறே ?

**பாடினி :** நான் அவரிடத்திலே பாடணும்.

**இரண்டாம் வீரன் :** உன் பாட்டு அவருக்கு இப்போ ருசிக்காது...மால்தேவ் பொண்ணு பாட்டுத்தான்... அவருக்கு இப்போ...

**பாடினி :** வீரர்களே, நான் ராஜுவை எச்சரிக்கை பண்ணத்தான் வந்திருக்கிறேன். என்னாலே இந்தக் கல்யாணம் நடக்காதபடி தடுக்க முடியும்.

**முதல் வீரன் :** நிஜமாகவா? அல்லது...

**இரண்டாம் வீரன் :** நீ சொல்றது நிஜமா இருந்தா நாங்க உன்னை இப்பவே ராஜுவிடம் அழைச்சுப் போறோம்...

**முதல் வீரன் :** எங்களுக்கு ஒருத்தருக்குக்கூட இந்தக் கல்யாணம் பிடிக்கலே...சேனாபதிக்கும் பிடிக்கலே...ஆனா ராஜு பிடிவாதமா இருக்கிறார்.

**இரண்டாம் வீரன் :** அந்தப் பொண்ணு மேலே ராஜு மயங்கிப் போய்ட்டார்.

**முதல் வீரன் :** அடே சும்மா இரடா—ராஜு அந்தப் பொண்ணைப் பார்த்ததே இல்லே. மால்தேவுக்கு பொண் இருக்கிறதுகூட அவருக்கு அந்தத் தூதன் வரும் வரையிலும் தெரியாது.

பாடினி : அப்போ, ராணுவை நான் பார்க்க உதவி செய்வீர்களா?

முதல் வீரன் : கட்டாயமாகச் செய்யறோம். எங்க சேனாபதிகிட்ட முதல்லே சொல்லி ஏற்பாடு பண்றோம். எப்படியாவது ராணுவை இந்தக் காரியத்திலிருந்து தடுத்தாப் போதும்...வா, சேனாபதியிடம் போவோம்.

[மூவரும் போகிறார்கள்.]

திரை

## காட்சி ஐந்து

[மந்திரியின் கூடாரம். மந்திரியும் சேனாபதியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாலை நேரம்.]

மந்திரி : சேனாபதி, நமது படைவீரர்களுக்கெல்லாம் வசதியாக எல்லா ஏற்பாடுகளும் நடந்திருக்கின்றனவா ?

சேனாபதி : அதில் ஒன்றும் குறைவே இல்லை. ஆனால் அவர்களுக்கு மனத்தில்தான் உற்சாகம் கிடையாது.

மந்திரி : ராணுவின் யோசனையை நானும் ஆமோதிக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே ?

சேனாபதி : ஆமாம்; அவர் எல்லோருடைய விருப்பத்திற்கும் மாறாக இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கிறார். நமது வீரர்கள் சித்தூருக்குள் காலெடுத்து வைக்கவே நாணுகிறார்கள்.

மந்திரி : சித்தூருக்குள் நாம் நுழைந்து விட்டால் கோட்டை நம்முடையதாகுமென்று ராணு நினைக்கிறார் போலிருக்கிறது...

**சேனுபதி :** அதெப்படி முடியும்? அவர் அவ்வாறு நினைத்தால் மந்திரியாகிய நீங்கள் அது சரியல்லவென்று எடுத்துக்காட்ட வேண்டாமா? சித்தூருக்குள் நுழைந்ததும் ராணுவை அவர்கள் சிறை செய்துவிட்டால்...?

**மந்திரி :** நான் என் கடமையைச் செய்யத் தவறவில்லை. ஆனல் அவர் பிடிவாதமாக இருக்கிருர். இளமையின் துடிப்பு அவரை ஏதாவது இப்படிச் செய்யத் தூண்டுகிறது.

**சேனுபதி :** போருக்கு நாம் ஆயத்தம் செய்திருந்தால் அவர் இந்த யோசனையை மேற்கொண்டிருக்கமாட்டார்.

**மந்திரி :** அதிலும் கஷ்டம் இருக்கத்தானே செய்கிறது? நமது படை பலம்...

**சேனுபதி :** ஆமாம்; இருந்தாலும் போர் செய்து எல்லோரும் வீர மரணமெய்தி யிருக்கலாம். நமது வீரர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

**மந்திரி :** இனி அதை யோசித்து என்ன செய்வது? போருக்குப் புறப்படுவது இந்த நிலையிலே உசிதமல்லவென்று சொன்னபோது நாம் யாரும் போருக்குப் பயந்து சொல்லவில்லை. படை பலத்தை இன்னும் பெருக்க வேண்டும் என்பதற்காகவே சொன்னேம். அது இப்படி முடிந்துவிட்டது...இனி ராணுவின் விருப்பப்படியே நாம் சரிவரக் கடமை செய்வோம். அவருக்காக உயிர்த் தியாகம் செய்ய நாம் தயாராக இருப்போம்.

**சேனுபதி :** அது சரி; அதைப்பற்றி நீங்கள் சந்தேகப்பட வேண்டாம்; நானும் நமது வீரர்களும் ராணுவுக்காக எதுவும் செய்யத் தயாராக இருக்கிறேம்... இருந்தாலும்...

**மந்திரி :** அந்தப் பாடினி வந்திருக்கிருளே, அவள் என்ன சொல்லுகிருள்?

சேனாபதி : அவள் ராணாவுக்கு ஏதோ எச்சரிக்கை செய்யப் போகிறாளாம். கல்யாணத்தைத் தடுக்க அவளால் முடியுமாம்.

மந்திரி : அப்படியா ? ,அதுவும் நல்லதுதான். அவளை அழைத்துவரச் சொல்லுங்கள். நான் ராணாவிடம் தெரிவித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்.

[புறப்படுகிறார்.]

திரை

## காட்சி ஆறு

[ராணா ஹமீர்சிங்கின் கூடாரம். ஹமீர்சிங், மந்திரி, சேனாபதி ஆகியோர் அமர்ந்திருக்கிறார்கள். பாடினி பாடுகிறாள்.]

பாடினி : [பாட்டு] (காவடிச்சிந்து மெட்டு)

தேசமெங்கும் தேடினாலும் உங்கள் முன்னோர் வாழ்ந்த நாடாம்
சித்தூரென்னும் தேசம்போல இல்லை—அதன்
கீர்த்திபேசா நாவுமெங்கும் இல்லை—எங்கள்
சீர்மிகுந்தநல் ஆடலோங்கிடும் பாடல்போற்றிடும் வீரம்வாழ்ந்
தெய்வம்புகழ் பண்ணிசைக்கோர் எல்லை. [திடும்

தாசரதீ தந்தமைந்தர் அந்தவம்சம் வந்தவீரர்
தங்கள் உயிர் தந்துகாத்த நாடு—அது
பொங்கும் வீரம் வாழ்ந்தநல்ல வீடு—இன்று
புன்மையெய்தியே சின்னபின்னமாய்ப் போனதென்றசொல்
போந்ததேஉம் வீரத்திற்கோர் கேடு

வேலையேந்தி வாளையேந்தி வாழ்ந்தமக்கள் வீரமெல்லாம்
வேற்றுநாட்டான் சேவையான தந்தோ—பாரோர்
போற்றும் வீரத் தாய்கள்மனம் நொந்தார்—உன்றன்

புனிதமாமலர் அடியில் விழ்ந்துமே முழுமனத்துடன் நானும்
போரெழுந்து போவாய்விர மைந்தா [வேண்டினேன்

மாலதேவன் பெண்ணை நீயும் கையினிலேதொட்டுவிட்டால்
வந்துசேரும் பழியுன்மீது திண்ணம்—என்றன்
வார்த்தைகேட்டு மாற்றுவாயுன் எண்ணம்— நானும்
வாதுபேசியே சூதுசெய்துபின் வஞ்சம்செய்யவே வந்ததில்
வாழ்வுமோங்க வந்ததேயிவ் வண்ணம்...... [ஐயுன்

ஹமீர்சிங் : பேஷ், பாட்டு மிக நன்ருயிருக்கிறது. சித்தூரின் புகழைக் கேட்கும்போது என் உள்ளம் குதூகலமடைகிறது.

பாடினி : ராணு, அந்தப் புகழ் மங்கிப் போயிற்றே என்று தான் நாங்கள் வருந்துகிறோம். இனிமேல் நாங்கள் பாடிப் புகழ்வதற்குச் சித்தூரைப் போல வேறு எந்த நாடிருக்கிறது?

ஹமீர்சிங் : சித்தூரின் புகழை மறுபடியும் நிலைநாட்ட என்னல் முடியாதென்ரு கருதுகிருய்?

பாடினி : ராணு, என்னைத் தாங்கள் மன்னிக்கவேண்டும். தங்களுடைய வீரத்தை நான் குறை கூறவில்லை..... ஆனல் தாங்கள் மேற்கொண்டிருக்கும் காரியம்....

ஹமீர்சிங் (சிரித்து) : ஓ அதுவா? நீயும் மந்திரி சேனுபதிகளோடு சேர்ந்து கொண்டாயா? உன் கருத்தை உன் பாட்டிலேயே புரிந்துகொண்டேன்.

பாடினி : நான் உங்களை எச்சரிக்க விரும்புகிறேன்... மால்தேவின் மகளை மணந்தால் உங்களுக்குப் பெரும் பழி ஏற்படும்...என்ன பழி வருமென்று தெரிந்து கொள்ள விரும்பினுல் நான் அதைப் பற்றிச் சொல்ல முடியும். ஆனல் உங்களிடம் தனிமையிலேதான் அதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஹமீர்சிங் : மால்தேவ் ஒரு ரஜபுத்திரன்தானே?

பாடினி : ஆமாம், அந்நியன் வீசியெறிந்த எச்சிலை உண்டு வாழ்கின்றவன். அவன் பிறப்பால் ரஜபுத்திரனுக இருந்தாலும் செய்கையில் அந்தப் புனித ஜாதியை இழந்துவிட்டான். அதுமட்டுமல்ல......

ஹமீர்சிங் : பாடினி, உன்னுடைய துடுக்கான பேச்சுக் கேட்பதற்கு இன்பமாகத்தான் இருக்கிறது...ஆனல் பாட்டுப் பாடுவதை விட்டுவிட்டு இப்படி அரசியல் விவகாரமெல்லாம் பேசுவதற்கு முன் வராதே...என் முன்னிலையிலே மால்தேவை இழிவாகப் பேசும் நீ வேருேரிடத்திலே என்னைப் பற்றியும் அப்படித்தான் பேசுவாய்.

பாடினி : ராணு, நீங்கள் மால்தேவின் மகளான அந்தக் கமலாதேவியின் விருத்தாந்தத்தை நன்கு அறிந்து கொள்ளவில்லை...அவள்...

ஹமீர்சிங் : போதும் போதும். ராஜநீதி பேசுவதைவிட்டு வாழ்க்கைச் சரிதம் படிக்க ஆரம்பித்துவிட்டாயா? மந்திரி, இவளுக்குத் தக்க சன்மானம் கொடுத்து அனுப்புங்கள்.

பாடினி : நான் பரிசு பெற்றுப்போக வரவில்லை. உங்களுக்கு எச்சரிக்கை செய்யவே வந்தேன்,

ஹமீர்சிங் : மந்திரி, இந்தத் துடுக்குக்காரியைச் சீக்கிரம் அனுப்பி வையுங்கள். பாடினி, நீ இவ்வளவு துடுக்காகப் பேசுவது உன் தொழிலுக்கு உகந்ததல்ல.

பாடினி : ராணு, ஒரு வார்த்தை தங்களுடன் தனித்துப் பேச அநுமதி தரமாட்டீர்களா?

ஹமீர்சிங் : உன் எச்சரிக்கையை முன்பே புரிந்து கொண்டேன். நீ போகலாம்.

[மந்திரி எழுந்து புறப்படுகிறார். பாடினியும் விருப்பமின்றி ஏமாற்றத்தோடு போகிறாள்.]

திரை

## காட்சி ஏழு

[சித்தூர்க் கோட்டையில் ராணா ஹமீர்சிங் தங்குவதற்காக விடப்பட்ட ஒரு விசாலமான மண்டபம். ராணா ஹமீர்சிங்கும் சேனாபதியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். காலை ஒன்பது மணியிருக்கும்.]

ஹமீர்சிங் : சேனாபதி, நமது வீரர்களெல்லாம் ஆயத்தமாக இருக்கிறார்களா ?

சேனாபதி : ராணா, எல்லோரும் சித்தமாகக் காத்திருக்கிறார்கள். தங்கள் ஆணையை உடனே செய்து முடிக்கத் தயாராக இருக்கிறோம்.

ஹமீர்சிங் : மால்தேவ் ஏதோ சூழ்ச்சிதான் நினைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது.

சேனாபதி : சித்தூர்க் கோட்டைக்குள் நுழையும்போதே எனக்கும் அப்படித்தான் பட்டது. திருமணத்திற்கான அறிகுறிகள் ஒன்றுமே காணப்படவில்லை.

ஹமீர்சிங் . மந்திரி என்ன நினைக்கிறார் ?

சேனாபதி : அவரும் அதே மாதிரிதான் சந்தேகப்படுகிறார்...இந்தக் கோட்டையிலுள்ள மக்களுக்கே இந்தத் திருமண விஷயம் தெரியாதாம்...யாருக்கும் அறிவிக்கவே இல்லையாம்.

ஹமீர்சிங் : அப்படியா? எதற்கும் அந்த மால்தேவ் வரட்டும். நேரில் பேசி அவன் எண்ணத்தை அறிகிறேன். நீங்கள் தயாராக இருங்கள். சாந்தசிங் சேனையோடு வந்து சேர்ந்தாயிற்று ?

சேனபதி : கோட்டையிலிருந்து ஐந்து காத தூரத்தில் சேனையோடு தங்கியிருக்கிறார். அவருக்கு அடிக்கடி சேதி அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

ஹமீர்சிங் : இங்கு ஏதாவது சதி நடந்தால் உடனே சாந்தசிங் கோட்டையைத் தாக்கவேண்டும்.

[மால்தேவ் அவசரமாக வருகிறான்.]

சேனபதி : அதோ, மால்தேவ் வருகிறார்.

ஹமீர்சிங் (மிடுக்கோடு) : மால்தேவ், நீங்கள் நினைத்திருக்கும்படியான சூழ்ச்சி என்ன?

மால்தேவ் : ராஜ ஹமீர்சிங், நான் யாதொரு சூழ்ச்சியும் நினைக்கவில்லையே? என் மகளை உங்களுக்கு மணம்புரிந்து கொடுக்க வேண்டும் என்ற உண்மையான ஆசையால் தான் எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன்.

ஹமீர்சிங் : கல்யாணம் என்பதற்கு இக்கோட்டையிலே ஓர் அறிகுறியும் காணப்படவில்லையே ? மங்கள தோரணம்கூட எங்கும் காணோம். கோட்டைக்கு அதிபதியின் மகளுடைய கல்யாணம் வெகு விமரிசைதான்...

மால்தேவ் ; ஓ, நீங்கள் அதைப்பற்றிச் சந்தேகம் கொண்டிருக்கிறீர்களா ? நான் வேண்டுமென்றே இவ்வாறு வெளி ஆடம்பரங்களை யெல்லாம் விலக்கியிருக்கிறேன்...

ஹமீர்சிங் : ஏன், சித்தூரின் செல்வத்தையெல்லாம் அந்த அலாவுதீன் கொள்ளை கொண்டுபோய்விட்டானா என்ன ?

மால்தேவ் : ஹமீர்சிங், உங்களுக்கு நான் ஒருவிஷயத்தை முன்பே தெரிவித்திருக்க வேண்டும். அதில் தவறியதற்காக வருந்துகிறேன். இக்கல்யாணத்தின் மூலமாக நமக்குள் நெருங்கிய உறவு ஏற்படப் போகிறது. அதை டெல்லி சுல்தானன அலாவுதீன் வரவேற்கமாட்டார் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆடம்பரமாகப் பலரும் அறிய மணம் நடக்க ஏற்பாடு செய்தால் இது விஷயம் சுல்தானுக்குத் தெரிந்துவிடும். அதனால் இதற்குத் தடை ஏற்படலாம்.

ஹமீர்சிங் : இப்பொழுது இந்த மணவிஷயம் அவனுக்குத் தெரியாதா ?

மால்தேவ் : தெரியாமல்தான் செய்திருக்கிறேன்.

ஹமீர்சிங் : பின்னல் தெரியும்போது அலாவுதீன் உங்கள் மீது கோபங்கொள்ளமாட்டான ?

மால்தேவ் : நான் அப்படி எதிர்பார்க்கவில்லை.

ஹமீர்சிங் (கோபமாக) : ஏன்? நானும் அவனுக்கு அடிப் பணி புரியும் தாசனுக மாறிவிடுவேன் என்ரு ?

மால்தேவ் : ஹமீர்சிங், எதிர்காலத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்து நான் இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்யவில்லை. என் மகள் கமலாதேவியை உங்களுக்கு மனைவியாக அளிக்கவேண்டும் என்ற ஒரே ஆசையால்தான் இதற்கு நான் துணிந்தேன்.

ஹமீர்சிங் : உண்மையான ரஜபுத்திரன் உள்ளத்தில் ஒன்றை வைத்து வாயில் ஒன்றைப் பேசமாட்டான். அந்த முறையிலே உங்களையும் ரஜபுத்திரனென மதித்து இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுகிறேன்...சரி, மணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள்.

**மால்தேவ்:** அப்படியே செய்கிறேன்; சித்தூருக்கு இது நல்லநாளாக அமையவேண்டுமென்பது எனது விருப்பம். இன்று முதல் அதன் தொல்லைகள் ஒழியவேண்டும். நான் போய் முகூர்த்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன்.

[போகிறான்.]

திரை

## அங்கம் இரண்டு—காட்சி ஒன்று

[திருமணம் நடந்த அதே நாள் இரவு. முழு நிலவு காய்கிறது. ஹமீர் சிங்கும் கமலா தேவியும் தமது படுக்கை அறையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

**ஹமீர்சிங் :** கமலா, இப்படி என் அருகிலே வா. ஏன் தயங்குகிறாய்? சித்தூருக்கு நான் நாயகனாக இப்பொழு தில்லாவிட்டாலும் உனக்கு நான் நாயகன்தானே ?

**கமலாதேவி :** ராணா, தாங்கள் எனக்கு நாயகனாக வாய்த்ததில் நான் எவ்வளவோ பெருமையும் சந்தோஷ மும் அடையவேண்டும்; ஆனால் அவற்றிற்கெல்லாம் தடையாக ஒரு முக்கியமான சம்பவம் குறுக்கே நிற் கிறது. அதைப் பற்றி நான் தங்களிடம் முதலில் கூற விரும்புகிறேன். அநுமதியளிக்கவேண்டும்.

**ஹமீர்சிங் :** என்ன அப்படிப்பட்ட முக்கிய விஷயம் ? உன் தந்தை மால்தேவ் எனக்கு விரோதியாதலால் நான் அவருடன் சிநேகம் பாராட்டமாட்டேன் என்று வருந்து கிறாயா?

**கமலாதேவி :** இல்லை. என் தந்தை தங்களுக்கு மட்டும் விரோதியல்ல. அவர் எனக்கும் விரோதிதான்.

**ஹமீர்சிங் :** உண்மையான பதிவிரதை கணவனுடைய விரோதிகளை அவர்கள் யாராயிருந்தாலும் தனதுவிரோதி களாகக் கருதவேண்டும். நீ அவ்வாறு நினைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கமலா, இங்கே வா. இன்று நிலவின் வெண் முத்துச் சுடர்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன பார். நிலா முற்றத்துக்குப் போகலாமா?

கமலாதேவி: ராணா, தங்களிடம் முதலில் நான் ஒரு விஷயத்தைக் கூறவேண்டும். அதற்கு உங்கள் அநுமதியை நாடி நிற்கிறேன்.

ஹமீர்சிங்: என்ன விஷயம் அது? ஏன் அப்படி ஒதுங்கி நிற்கிறாய்?

கமலாதேவி (*விசனத்தோடு*): அந்தச் சம்பவத்தைச் சொல்லாமல் நான் தங்கள் அருகே வர உரியவளல்ல.

ஹமீர்சிங்: சரி, விரைவிலே கூறிவிடு. அது என்னவாக இருந்தாலும் அதைப் பற்றி இப்பொழுது நான் கவலைபடப் போவதில்லை.

கமலாதேவி: தாங்கள் கவலைப்படாமலிருந்தால் அது எனது பெரிய பாக்கியந்தான். ஆனால் உண்மை தெரிந்தால் தாங்கள் என்னைப்பற்றி எவ்வாறு எண்ணப் போகிறீர்களோ என்று என் உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது.

ஹமீர்சிங்: கமலா, உன்னுடைய அழகிய முகம் கவலையால் வாடியிருப்பதை நான் அறிகிறேன். உன்னைத் தொட்டு நான் தாலி கட்டும்போது கூட நீ வாட்டத்தோடுதானிருந்தாய். என்ன காரணம்?

கமலாதேவி: தங்களைக் கண்டு நான் எவ்வளவோ ஆனந்தமடைவதற்குப் பதிலாக அழுது வாடவேண்டியிருக்கிறது. அது என் தலைவிதி.

ஹமீர்சிங்: நீ விஷயத்தை வெளிப்படையாகச் சொல். உனக்கு ஒரு துன்பமும் இல்லாமல் நான் காக்கிறேன்.

கமலாதேவி: தங்கள் வார்த்தைகள் எனக்குத் தைரியமளிக்கின்றன. தங்களோடு கூட இருந்து வாழும் பாக்கியம் கிடைக்குமென்ற நம்பிக்கையை அளிக்கின்றன. ஆனால்...

[சொல்லத் தயங்குகிறாள்.]

ஹமீர்சிங் : எதுவா யிருந்தாலும் சொல்......தயங்க வேண்டாம்.

கமலாதேவி (உணர்ச்சியோடு) : அதை எப்படிக் கூறுவ தென்று தெரியவில்லை...நான் பாவம் செய்தவள்...

ஹமீர்சிங் : நீ மால்தேவின் மகளாகப் பிறந்தது ஒரு பாவந்தான்...அதை இனி மறந்துவிடு. உன்னைத் தொட்டு எப்போது தாலி கட்டினேனோ அது முதல் நீ என் மனைவி...

கமலாதேவி : என் தந்தை உங்களை ஏமாற்றி இந்த மணத்தை முடித்துவிட்டார். என்றாலும் அதைத் தடுக்க முடியவில்லை. (தேம்பிக் கொண்டு) ராணா, நான் ஒரு விதவை...முன்பே ஒருவனுக்கு நான் வாழ்க்கைப் பட்டவள்...

ஹமீர்சிங் (திடுக்கிட்டுக் கோபமாக) : ஹா, என்ன சொன் ணாய்? நீ ஒரு விதவையா?

கமலாதேவி : ராணா, என்னை மன்னிக்கவேண்டும்.

ஹமீர்சிங் (கோபத்தோடு) : உன்னை மன்னிப்பதா? எனது வம்சத்திற்கு மாசு கொண்டுவந்த உன்னை இதோ வாளால் வெட்டி வீழ்த்துகிறேன் பார்...

[பக்கத்தில் வைத்திருந்த வாளை எடுத்துக் கொண்டு வேகமாக வருகிறான்.]

கமலாதேவி (படபடப்புடன்) : ராணா லக்ஷ்மண சிங்கின் பெயரால் ஆணையிடுகிறேன். அவருடைய வீர வம்சத்தில் பிறந்த நீங்கள் ஒரு பெண்ணையா கொலை செய்யப் போகிறீர்கள்? பகைவர்களின் குருதியிலே தோய்ந்த வாளைப் பெண்ணின் ரத்தம் பட்டுக் கேவல மடையச் செய்யாதீர்கள்...

ஹமீர்சிங் : ஹா, நீ கூறுவதென்ன? பெண்ணின் ரத்தமா? இருந்தாலும் நீ என் குலத்தைக் கெடுத்தவள்.

[தயங்கி நிற்கிறுன்.]

கமலாதேவி : தங்கள் பாட்டி பத்மினி தேவிக்காக ஆயிரக்கணக்கான ஆடவர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள். தங்கள் உயிருக்கு மேலாக மதித்திருந்த இந்தச் சித்தூரையும் இழந்தார்கள். தங்கள் தந்தை யாரும் அவர்களில் ஒருவர்... ஒரு பெண்ணுக்காக அவர்கள் அனைவரும் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள். ஆனால் நீங்கள் ஒரு பெண்ணை வாளால் துணிக்க நினைக் கிறீர்கள். இதுதான் உங்கள் குலத்திற்குப் பெருமையா?

ஹமீர்சிங் : அடி பாதகி—உன் தந்தை என்னை அவ மானப்படுத்த உண்டாக்கிய இந்தச் சூழ்ச்சியில் நீயும் உடந்தையாக இருந்திருக்கிருய்...

கமலாதேவி : நான் அவருடைய சூழ்ச்சிக்கு ஒருபோதும் உடந்தையல்ல...அதைத் தடுக்க எவ்வளவோ முயன் றேன். தெய்வ சாட்சியாகச் சொல்லுகிறேன்...இந்த விஷயத்தைப் பற்றித் தங்களை எச்சரிக்கப் பலவகைகளி லும் உபாயம் தேடினேன்......ஆனல் என் தந்தை அவற்றையெல்லாம் தடுத்துவிட்டார்...மணவறைக்கு வரும் வரையிலும் நான் ஒரு சிறைக் கைதி போலவே இருந்தேன். இருந்தாலும் அந்தப் பாடினியைத் தங்க ளிடம் அனுப்பினேன். ஆனல் நீங்கள் அவள் செய்த எச்சரிக்கையை மதிக்கவில்லை. அவளோடு தனியாகப் பேச மறுத்துவிட்டீர்கள்.

ஹமீர்சிங் : எனது மந்திரிகளும் மற்றவர்களும் எவ் வளவோ தடுத்தும் அவர்கள் யோசனையை மதிக்காது நான் இந்த அவமானத்தைத் தேடிக் கொண்டேனே! பாடினியை நீயா அனுப்பினுய்?

கமலாதேவி : ஆமாம், நான் மனப்பூர்வமாகச் செய்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. தந்தையின் சூழ்ச்சியே வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் தாங்கள் என்னை ஏற்றுக் கொள்வீர்களானால் எனது தந்தையின் சூழ்ச்சியையே உபயோகப்படுத்திச் சித்தூரைத் தங்கள் வசமாக்க நான் உறுதி கூறுகிறேன். விதவையென்ற காரணத்தால் தாங்கள் என்னைப் புறக்கணிப்பதானால் நானே என் கையால் என் உயிரைப் போக்கிக் கொள்ளுகிறேன்.

ஹமீர்சிங் (கோபமாக) : உன்னுடைய உதவியா? ஒரு விதவைப் பெண்ணின் உதவியை நாடியா நான் சித்தூரை மீட்க வேண்டும்? ரஜபுத்திர ஆண்மையும் வீரமும் இன்னும் அவ்வளவு மோசமாகி விடவில்லை.

கமலாதேவி : ஒரு பெண்ணாலேயே சித்தூர் அந்நியன் வசமாயிற்று. மீண்டும் ஒரு பெண்ணாலேயே அது சுதந்தரமடைந்தது என்றால் அதனால் அதன் பெருமை குறைந்துவிடாது...ரஜபுத்திரப் பெண்மணிகளும் உங்களைப் போன்ற வீரர்களைப் பெற்றளிக்கும் வீரத் தாய்மார்கள்தானே? நமது வம்சத்தில் வந்த எத்தனையோ வீரப் பெண்கள் வாளேந்திப் போர் செய்யவில்லையா? தங்கள் நாட்டின் மானத்தைக் காப்பாற்றவில்லையா?

ஹமீர்சிங் (வெறுப்போடு) : ஒரு விதவையின் சூழ்ச்சியால் சித்தூரின் மானம் காப்பாற்றப்பட வேண்டியதில்லை.

கமலாதேவி : நான் விதவையென்பதால் தாங்கள் இவ்வாறு கோபமடைந்திருக்கிறீர்கள்...உண்மையிலே நான் யாருக்கு வாழ்க்கைப்பட்டேன்। என்பதே எனக்கு நன்றாகத் தெரியாது...சிறு பெண்ணாக இருக்கும்போது பட்டி ஜாதியின் தலைவனுக்கு என்னை விவாகம் செய்து

கொடுத்தார்கள். நான் அவருடைய நாட்டைக்கூடக் கண்டதில்லை. அவரைக்கூட நான் மணப் பந்தலிலன்றி மறுமுறை கண்டதில்லை. அவர் எப்பொழுதோ சண்டையில் இறந்து போனாராம்...என்னை மணமகளென்று ஒருநாள் சொன்னார்கள். பிறகு விதவையென்று இன்னொருநாள் சொன்னார்கள்...அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

ஹமீர்சிங்: யார்? பட்டி ஜாதியாரின் தலைவனா? அவன் எனது சிறிய தந்தை அஜேஜஸிங்கின் வாளிற்கு இரையாகி விட்டானல்லவா?

கமலாதேவி: ஆமாம்—அவரைத் தமக்குத் துணையாகப் பெறுவதற்காகவே என் தந்தை என்னைச் சிறு வயதிலேயே அவருக்கு மணம் செய்து கொடுத்தார்...அலாவுதீனின் ராஜப் பிரதிநிதிக்கு மருமகனாகும் ஆசையால் அவர் இந்தக் கல்யாணத்திற்கு உடன்பட்டிருக்கிறார்.

ஹமீர்சிங்: அதே சூழ்ச்சியை மால்தேவ் என்னிடமும் இப்பொழுது செய்திருக்கிறான்.

கமலாதேவி: இந்த அபாக்கியவதி அந்தச் சூழ்ச்சிக்கெல்லாம் கருவியாக ஏற்பட்டுவிட்டேன். ஆனால் நான் அதை ஆமோதித்ததாகத் தாங்கள் எண்ணக்கூடாதென்று வேண்டிக் கொள்கிறேன்...என் தந்தையின் சூழ்ச்சியையே தங்களுக்குச் சாதகமாகச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நான் இப்பொழுது என் உயிரை வைத்திருக்கிறேன்.

ஹமீர்சிங்: பெண்ணே, உன் வார்த்தைகள் என் கோபத்தை ஒருவாறு தணிக்கின்றன...ஆனால் மால்தேவ் எதற்காக இப்படிச் சூழ்ச்சி செய்தானென்று எனக்கு இன்னும் நன்றாக விளங்கவில்லையே?

**கமலாதேவி :** நான் விதவையென்ற விஷயத்தை யாரும் தங்களிடம் தெரிவிக்கக்கூடாதென்று அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அப்படி இந்த விஷயம் தெரியாமலிருக்கும்போது அவரோடு நீங்கள் நெருங்கிய உறவு கொண்டு விட்டால் பிறகு தமது ஆட்சிக்குத் தொந்தரவில்லை யென்பது அவருடைய எண்ணம்...

**ஹமீர்சிங் :** நான் நெருங்கி உறவுகொள்ள வராவிட்டால்...?

**கமலாதேவி :** அவரே நான் விதவையென்பதை எங்கும் வெளிப்படுத்தித் தங்களுக்கு இழிவு கொண்டுவர நினைத்திருக்கிறார்...விதவையை மணந்த உங்களுக்குப் பணிந்து ரஜபுத்திர வீரர்கள் நடக்க மறுப்பார்கள் என்பது அவர் நம்பிக்கை.

**ஹமீர்சிங் :** அவனுடைய சூழ்ச்சி அந்தவகையில் வெற்றி பெறலாம் என்றுதான் நான் நினைக்கிறேன்...மால்தேவின் குடும்பத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்வதையே மக்கள் வரவேற்கவில்லை.

**கமலாதேவி :** அவருடைய சூழ்ச்சி பலிக்காது; விதவை என்பதை நானே தங்களிடம் மணமாகிய இன்றே கூறுவேன் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. என்றால் உங்கள் வம்சம் மாசுபடும் என்று தங்களுக்குத் தோன்றினால் இப்பொழுதே என்னைத் தள்ளிவிடுங்கள். என்னைத் தங்களுடைய புனிதமான கரங்களால் தொட வேண்டாம்...தங்கள் வாளும் என்மீது பட்டால் அது மாசடைந்து விடும்...நானே என் கையால் இந்த உயிரை மாய்த்துக் கொள்கிறேன்...ஆனால்...

**ஹமீர்சிங் :** என்ன தயங்குகிறாய்? உன்னுடைய உள்ளக் கருத்தையெல்லாம் ஒளிக்காமல் கூறிவிடு.

கமலாதேவி : எனது தந்தை பட்டி ஜாதித் தலைவனுக்கு என்னைப் பெண் கொடுத்தது வெறும் சூழ்ச்சியே. எட்டு வயதில் எனக்கு நடந்த அந்தக் கல்யாணம் ஒரு விளையாட்டாக இருந்தது...எனக்கு அறிவு வந்தது முதல் தங்களையே எனது கணவனாக அடைய வேண்டுமென்று தவஞ் செய்திருந்தேன்...அந்த ஆசையினாலேயே மணவரையிலே மௌனமாக இருந்தேன். எனக்கு நடந்த முதற் கல்யாணத்தைப் பற்றி நான் அப்பொழுது கூறியிருந்தால் நீங்கள் உடனே என்னை ஏற்க மறுத்து விட்டுச் சென்றிருப்பீர்கள்.

ஹமீர்சிங் : இப்பொழுது மட்டும் என்ன மாறுதல் ஏற்படப் போகிறது?

கமலாதேவி : இப்பொழுது தங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்ளவும் எனது உள்ளக் கருத்தைத் தங்களிடம் வெளியிடவும் எனக்குச் சமயம் வாய்த்திருக்கிறது. இந்த வாய்ப்பைப் பெறவே நான் மணப்பந்தலில் வாய் திறக்கவில்லை. தங்களை நாதனாகப் பெறவேண்டும் என்ற ஆசையால் வாடிய நெஞ்சத்தில் இப்படி ஒரு சபலம் கொண்ட இந்த ஏழைக்கு இரங்குவீர்களா ?

ஹமீர்சிங் : என்னை மணக்க ஆசையிருந்தும் அந்தப் பாடினியை எதற்காக அனுப்பினாய் ?

கமலாதேவி : உங்களுக்கு எச்சரிகை செய்யவேண்டியது என் கடமை யென்று அப்பொழுது கருதினேன். அந்தக் கடமையையும் நிறைவேற்ற முயன்றேன்......ஆனால் நேரில் தங்களைப் பார்த்தபிறகு........

ஹமீர்சிங் : நான் உன்னை ஏற்றுக் கொண்டாலும் நமது குடிகள் ஏற்றுக் கொள்வார்களா?

**கமலாதேவி :** அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தங்களுடைய கோபத்தை என்னல் மாற்ற முடியுமானால் நிச்சயமாகக் குடிமக்களையும் நான் சமாதானப்படுத்தி விடுவேன். எனக்கு அந்த நம்பிக்கை உண்டு.

**ஹமீர்சிங் :** கமலா, உன்னுடைய வார்த்தைகள் என்னைக் கவருகின்றன. மால்தேவ் செய்த சூழ்ச்சிக்காக உன் மேல் கோபங்கொள்வது நியாயமில்லைதான். உன்மீது அவனுக்கு உண்மையான வாஞ்சை இருந்திருந்தால் உன்னை இவ்வாறு உபயோகப்படுத்தி யிருக்கமாட்டான். அவனுடைய சூழ்ச்சியே அவனுடைய ஆட்சியின் முடிவுக்குக் காரணமாக இருக்கும்படி செய்வதில் எனக்கும் ஓர் ஆசை பிறக்கிறது—

**கமலாதேவி :** ராணா, நான் பாக்கியசாலியாகிவிட்டேன். அல்லும் பகலும் தங்களுக்குச் சேவை செய்வதோடு தங்கள் நோக்கம் நிறைவேறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பேன்.

**ஹமீர்சிங் :** நாம் நாளைக் காலையிலேயே காயில்வரம் புறப்பட வேண்டும். இங்கு நாம் தங்கினால் நமது குடிமக்கள் தவறான எண்ணம் கொள்வார்கள்.

**கமலாதேவி :** எனக்கும் அதுவே விருப்பம்...இங்கு அதிகம் தாமதித்தால் மக்களின் சந்தேகம் அதிகமாகிவிடும். எனது தந்தையின் வலையில் நன்றாக நீங்கள் வீழ்ந்து விட்டதாக அவர்கள் முடிவு கட்டி விடுவார்கள்.

**ஹமீர்சிங்** (*சிரித்து*): நான் உன் தந்தையின் வலையில் விழவில்லை; உன்னுடைய வலையில்தான் விழுந்துவிட்டேன்.

**கமலாதேவி :** நமது குடிமக்களிடத்தே எனக்கு முன்பொரு கல்யாணம் நடந்த விஷயத்தை நானே முதலில்

சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் நான் அவர்களை என் வசப்படுத்த முடியும். சித்தூரிலுள்ள மக்கள் வாயிலாக அறிந்தால் பலவகையான தவறான எண்ணங்களை அவர்கள் கொண்டு விடுவார்கள்.

**ஹமீர்சிங் :** அதற்காகத்தான் நாளைக் காலையிலேயே புறப்படலாமென்கிறேன்.

**கமலாதேவி :** அதற்கு முன்பே நான் தங்களுடைய மந்திரி பிரதானிகளையும் மற்ற வீரர்களையும் பார்த்துப் பேசவேண்டும்.

**ஹமீர்சிங் :** கமலா, முன்னெச்சரிக்கையாக நடப்பதில் நீ கொண்டுள்ள ஆர்வத்தைக்கண்டு எனக்கு மகிழ்ச்சி யுண்டாகிறது. உன் விருப்பப்படியே அனைவரையும் இப்பொழுதே பார்த்துப் பேசலாம். முதலில் மந்திரியை யும், சேனாபதியையும் அழைத்துவரச் சொல்லட்டுமா ?

**கமலாதேவி :** அவர்களை இங்கு அழைப்பதைவிட நாமே அவர்கள் இருக்குமிடத்திற்குச் செல்வது நல்லது. வாருங் கள், போகலாம்.

[புறப்படுகிறார்கள்.]

திரை

## காட்சி இரண்டு

[முன்பு நாம் சந்தித்த அதே போர்வீரர்கள் இருவரும் காயில்வரக் கோட்டையின் முன்னால் காவல் காத்திருக் கிறார்கள். ஈட்டிகள் தாங்கிக்கொண்டு அவர்கள் எதிர் எதிராக நடக்கிறார்கள். காலை பத்து மணியிருக்கும்.]

**முதல் வீரன் :** பாரா உஷார் !

**இரண்டாம் வீரன் :** பாரா உஷார் !

**முதல் வீரன் :** இப்போ நடக்கிற ராணுவப் பயிற்சியை யெல்லாம் பார்த்தா சித்தூர் மேலே ரொம்ப சீக்கிரத்தில் சண்டைக்கு புறப்படுவோம் போலே இருக்குதே?

**இரண்டாம் வீரன் :** அப்படித்தான் தோணுது. ராணு ஹமீர்சிங் துடித்துக்கொண்டிருக்கிறார்.

**முதல் வீரன் :** அவரைவிட ராணி கமலாதேவிக்குத் தான் அவசரம் அதிகமாம்.

**இரண்டாம் வீரன் :** நமக்குங்கூட இப்படியே இந்தக் காயில் வரக் கோட்டையிலே சும்மா இருக்கிறது பிடிக் கல்லே.

**முதல் வீரன் :** யாருக்குத்தான் பிடிக்குது ? இப்போ கமலாதேவி ஒரு வார்த்தை சொன்னால் எல்லோரும் உயிரைக் கொடுக்கத் தயார்.

**இரண்டாம் வீரன் :** கமலாதேவின்னு இப்போ எல்லோ ருக்கும் தெய்வம்!

**முதல் வீரன் :** நல்லவேளையாக ராணு ஒரே பிடிவாதமாக இருந்து இந்தக் கல்யாணம் செய்துகொண்டார். இல்லாத போனு கமலாதேவியை நாம் பார்க்க முடியுமா ?

**இரண்டாம் வீரன் :** கமலாதேவி வந்து பார்க்காத குடும் பம் இந்தக் காயில்வரத்திலே இருக்காது. யாரைக் கண்டாலும் எத்தனை பிரியமாகப் பேசுகிருர். எல்லோ ருக்கும் எத்தனை உபகாரம்!

**முதல் வீரன்** (பக்கத்தில் சென்று மெதுவாக): நமக்கெல்லாம் ஓர் இளவரசர் கிடைக்கப் போருராமே, வாஸ்தவமா ?

**இரண்டாம் வீரன் :** இளவரசர் என்று எப்படி இப்பவே கண்டாய்-இளவரசரோ, இளவரசியோ. ஆனல் இரண் டில் ஒன்று நிச்சயந்தான்.

முதல் வீரன் : அதுசரி. எப்படியிருந்தாலும் எனக்கு சந்தோஷந்தான். ராணி சுகமாக இருக்கவேணும்.

[பாடினி வருகிறாள். இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு வேகமாகக் கோட்டைவாயிலுக்குள் நுழையப் போகிறாள்.]

இரண்டாம் வீரன் : ஏய் யாரது ?

[ஓடி அவளை உள்ளே செல்லாமல் தடுக்கிறான்.]

முதல் வீரன் : பாரா உஷார்.

பாடினி (முன்னால் வந்து) : ஆமாம். பாரா ரொம்ப உஷார்தான்.

இரண்டாம் வீரன் : என்ன எங்களை ஏமாத்தி விட்டு நீ போய்விடுவையோ ?

பாடினி : நீங்கள் காவல் காக்கிற லக்ஷணம் எனக்குத் தெரிந்துவிட்டதே !

முதல் வீரன் : அடே, இவள் யாருன்னு தெரியுமா ? இவதாண்டா, அன்னைக்கு ராஜா கல்யாணத்துக்குப் போரபோது முகாமுக்கு வந்து பாட்டுப் பாடினவள்.

இரண்டாம் வீரன் : ஓகோ, நீயா?

பாடினி : ஆமா, நானேதான்.

முதல் வீரன் : நீதானே கமலாதேவியைக் கல்யாணம் பண்ணிக்கவாண்டாம்னு ராஜாவிடம் சொன்னவள்?

பாடினி : நீங்கள்தானே அப்படிச் சொல்லச் சொன்னீர்கள் ?

**இரண்டாம் வீரன் :** நாங்களா? அப்படி இன்னொரு தடவை சொல்லிப்பிடாதே; பல்லை உதிர்த்துப் போடுவோம்.

**பாடினி :** ஏன், இப்போ, கமலாதேவியை உங்களுக்கு பிடித்துப் போய்விட்டதா?

**முதல் வீரன் :** ராணி கமலாதேவி யார் தெரியுமா? அவர்தான் சித்தூர்க் கோட்டைக்குத் தெய்வம். எங்களுக்கும் தெய்வம்.

**பாடினி :** அந்தத் தெய்வத்தைத் தரிசிக்கத்தான் நான் போகிறேன். கொஞ்சம் வழிவிடுங்கள்.

**இரண்டாம் வீரன் :** மறுபடியும் ராணுகிட்டே ஏதாவது புரளி பண்ணிவிடாதே.

**பாடினி :** ஆமாம், சித்தூர்மேலே சண்டைக்குப் புறப்பட்டு வரப்போவதாக எங்கே பார்த்தாலும் பேசிக் கொள்ளுகிறார்களே ?

**முதல் வீரன் :** இல்லே, இல்லே. அதெல்லாம் ஒண்ணுமில்லே.

**பாடினி :** சித்தூரெல்லாம் அதே பேச்சாக இருக்குது?

**முதல் வீரன் :** அது அவங்களுக்கு எப்படித் தெரியும் ?

**பாடினி :** தெரியாதா? உங்களைப்போல எல்லோரும் வீதியிலே நின்று இதையெல்லாம் பேசினால் ஏன் தெரியாது?

**இரண்டாம் வீரன் :** நாங்க அப்படிப் பேசலையே?

**பாடினி :** பேசலையா? நீங்க பேசினதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.

**முதல் வீரன் :** இங்கே நாங்க காயில்வரத்திலே பேசினால் சித்தூருக்கு எப்படித் தெரியப் போறது ?

பாடினி : எப்படியா? சுவருக்குக் கூடக் காதிருக்கும் தெரியுமா ?

இரண்டாம் வீரன் : காதிருந்தாலும் காயில்வரத்துச் சுவர் ராணு ஹமீர்சிங்குக்கு அப்படித் துரோகம் பண்ணுது.

முதல் வீரன் : காயில்வரத்து மண்ணை மிதிச்சவன் வேறு தேசத்தவனு இருந்தாலும் அவன் ராணுவுக்குத் துரோகம் நினைச்சாலும் ராணி கமலாதேவிக்குத் துரோகம் நினைக்கவே மாட்டான்.

இரண்டாம் வீரன் : சித்தூரிலே இருக்கிறவர்கூட நம்ம ராணி பக்கந்தாண்டா.

பாடினி : இப்படியெல்லாம் நீங்கள் வெளியிலே பேசக் கூடாது. பேசினல் ராணி கமலாதேவியின் திட்டமெல் லாம் கெட்டுப்போகும்.

முதல் வீரன் : சரி, அது கிடக்கிறது. ஒரு பாட்டுப் பாடேன்.

இரண்டாம் வீரன் : ஆமாம், உன் பாட்டு எனக்கு ரொம்பப் பிடிச்சுது.

பாடினி : இப்போ எனக்கு நேரமில்லே. நான் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக இருக்கவேணும். அடுத்த தடவை வரும்போது பாடுகிறேன். இப்போது முதலில் ராணி யைப் பார்க்கவேண்டியது அவசியம்.

முதல் வீரன் : என்ன, விசயம்? எங்களுக்குச் சொல் லேன்.

பாடினி : எதுக்கு ? வீதியிலே நின்று பகிரங்கமாகப் பேசவா ?

**இரண்டாம் வீரன் :** சரி, சரி; சொல்ல வேண்டாம். ஆனால் சொன்னாலும் இனிமே வெளியிலே பேசமாட்டோம்.

[பாடினி கோட்டைக்குள் போகிருள்.]

**இரண்டாம் வீரன் :** பாரா...உஷார்...

[நடக்கிருன்.]

**முதல் வீரன் :** பாரா...உஷார்...டேய், இந்தப் பாடினி, ரொம்பக் கெட்டிக்காரிடா...

**இரண்டாம் வீரன் :** அவள் என்னமோ ரகசியமா சேதி ராணிக்குக் கொண்டு வந்திருப்பா...

**முதல் வீரன் :** உஸ்...பேசாதே ... சுவருக்கும் காதிருக்கும்...

**இரண்டாம் வீரன் :** ஆமாமா...இனிமே பேசப்படாது. பாரா உஷார்.

[இருவரும் எதிர் எதிராக நடக்கிருர்கள்.]

திரை

## காட்சி மூன்று

[ஹமீர் சிங்கின் அரசவை. ஹமீர்சிங்கும் மந்திரியும் அமர்ந்திருக்கிருர்கள். வெளியிலே மக்கள் கூடிச் செய்யும் மகிழ்ச்சி ஆரவாரம் கேட்கிறது.]

**ஹமீர்சிங் :** மந்திரி, இதென்ன ஆரவாரம் ?

**மந்திரி :** தங்களுக்கு மைந்தன் பிறந்திருப்பதை அறிந்து மக்கள் மகிழ்ச்சியால் கோஷமிடுகிருர்கள்...ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டம்.

[வெளியிலே மறுபடியும் கோஷம் கேட்கிறது. "ஜய, ஜயஹே, சித்தூரின் இளைய ராணு வாழ்க...பல்லாண்டு பல்லாண்டு வாழ்க" என்னும் முழக்கம் கேட்கிறது.]

ஹமீர்சிங் : சித்தூரை மீட்கும் வரையில் யாதொருவித மான கொண்டாட்டமும் கூடாதென நான் உத்தரவிட் டிருக்கிறேனல்லவா ?

மந்திரி : மக்களுக்கு அந்த உத்தரவு நன்முகத் தெரியும். இருந்தாலும் ராணி கமலா தேவியின் மேலுள்ள அன் பினுல் அவர்கள் இப்படி நடந்துகொள்கிருர்கள்.

ஹமீர்சிங் : கமலாதேவி எப்படி மக்களுடைய உள் ளத்தையெல்லாம் கவர்ந்துவிட்டாள் என்று எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அவளைப் பாராட்டிப் போற்றிப் பேசாதவர்களே இல்லை.

மந்திரி : ராணு, தாங்கள் கூறுவது மெய்தான். ராணி யிடத்திலே மக்களுக்குத் தனிப்பட்ட ஓர் அன்பிருக் கிறது. மக்களின் நலத்திற்காக அவர்கள் செய்யும் சேவையை ஒவ்வொருவரும் அறிந்திருக்கிருர்கள்.

ஹமீர்சிங் : படை வீரர்களும் அவளுக்குப் பணிந்து நடக்கிருர்களே !

மந்திரி : கல்யாணமாகி வந்தவுடனே ராணி கமலாதேவி நமது வீரர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார்கள் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சித்தூரைப் பற்றிப் பேசும்போது அவர்களுடைய சாந்தமான முகத்திலே நெருப்புப் பொறி பறந்தது. வார்த்தைகள் அனல் கக் கின. நமது வீரர்களும் சேனுபதியும் அன்றே ராணியைத் தெய்வமாகக் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள்...

ஹமீர்சிங்: மந்திரி, இவற்றையெல்லாம் கேட்டு நான் ஆனந்தமடையவேண்டும்...ஆனால் சித்தூரை மீட்காது கழியும் ஒவ்வொரு நாளும் என்னை வாட்டுகிறது. கல்யாணத்திற்கு முன்னாலே சித்தூரை மீட்கவில்லை என்ற ஒரு பழிதான் இருந்தது. இப்பொழுது...

மந்திரி: தாங்கள் இதைப் பற்றியே சதா கவலைப்படுகிறீர்கள்...தங்களைவிட ராணியின் கவலைதான் மிகப் பெரிதாயிருக்கிறது. நமது படை பலம் சித்தூரை மீட்கக் கொஞ்சமும் போதாது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்...அதுவும் அவர்களுக்கு வேதனை தருகிறது...

ஹமீர்சிங்: எப்பொழுதுதான் நமது படை அதிகரிக்கப் போகிறது? மெல்ல மெல்ல எல்லா ரஜபுத்திர அரசர்களும் அலாவுதீனோடு சேர்ந்துகொண்டார்கள். எனது மாமன் சந்தாரா தலைவர் ஒருவர்தான் நமக்குத் துணை வரக் கூடும். ஐயாயிரம் பேருக்கு மேல் படை திரட்ட அவரால் முடியாது...

மந்திரி: ராணி கமலா தேவி வேறு ஏதோ திட்டம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஹமீர்சிங்: அவள் திட்டமெல்லாம் இனிக் குழந்தையைத் தாலாட்டுவதிலே கரைந்துபோகும்.

மந்திரி: நீங்களே இவ்வாறு பேசலாமா?

ஹமீர்சிங்: சித்தூரை மீட்க முடியவில்லையே என்ற எண்ணம் எனக்கு இப்படி வெறுப்புணர்ச்சிகளை உண்டாக்குகின்றன...சித்தூரை மீட்ட பிறகு எனக்கு இந்தக் குழந்தை பிறந்திருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன்...மந்திரி, சேனாபதி எங்கே?

மந்திரி : அவர் ராணியைப் பார்த்துவரச் சென்றிருக்கிறார்...

ஹமீர்சிங் : அவரை உடனே இங்கு வரச் சொல்லுங்கள்...நாம் ஏதாவது புதிய திட்டம் வகுக்கவேண்டும்... இல்லாவிட்டால் கடைசி முறையாக எல்லோரும் போரிட்டு மடிவோம்.

[மந்திரி புறப்படும்போது சேனாபதியே எதிரில் வருகிறார்.]

மந்திரி : இதோ, சேனாபதியே வந்துவிட்டார்.

ஹமீர்சிங் : சேனாபதி, கமலாதேவி என்ன கூறுகிறாள்?

மந்திரி : நமது படை பலத்தைப் பற்றியெல்லாம் விவரமாகக் கேட்டார்கள். பிறகு ஏதோ யோசனை செய்துவிட்டு இன்னும் ஒரு வருஷம் பொறுத்துக்கொள்ளும்படி சொன்னார்கள்.

ஹமீர்சிங் : இன்னும் ஒரு வருஷமா? சேனாபதி, இந்த நிலையில் நாம் என்றைக்குமே சித்தூரை மீட்கமாட்டோம். கால தாமதம் செய்துகொண்டிருப்பதற்கு வேறு ஒரு பொருளும் எனக்குத் தோன்றவில்லை.

சேனாபதி : ராணி தேவி ஏதோ ஒரு முக்கியமான திட்டத்தை வைத்துக்கொண்டுதான் இவ்வாறு கூறுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

மந்திரி : அவர்கள் விருப்பப்படி இந்த ஒரு தடவையும் தாங்கள் பொறுக்க வேணும்.

ஹமீர்சிங் (கோபமாக) : மந்திரி, உங்களுக்கு வயோதிகம் மேலிட்டு விட்டது. போரைப்பற்றி ஆலோசனை கூற உங்களுக்குத் தகுதியில்லை.

மந்திரி : ராணு, நான் உங்கள் சிறிய தந்தை அஜேசிங்கிற்கும் அவருடைய தந்தைக்கும் மந்திரியாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் போர் மேற் சென்ற போதெல்லாம் நானும் முன்னணியில் நின்று சண்டை செய்திருக்கிறேன். ஆனால் அந்தப் போர்களிலே பெற்ற பழைய வடுக்களைக் காட்டி நான் பெருமை பேசப் போவதில்லை. நீங்கள் நடத்தத் தீர்மானிக்கும் எந்தப் போரிலும் நானும் முன்னால் வாளெடுத்து நிற்பேன். அதற்கு வேண்டிய சக்தியும் துணிச்சலும் இன்னும் எனக்கிருக்கின்றன.

ஹமீர்சிங் : நான் எதனால் அப்படிக் கோபமாகப் பேசினேன் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

மந்திரி : ராணு, அதை நான் நன்ருக உணர்கிறேன். சித்தூரை மீட்க வேண்டுமென்று நானும் தான் துடித்துக் கொண்டிருக்கிறேன். மூன்று தலைமுறையாக நான் செய்த சேவையினால் ஏற்படும் மன நிறைவைச் சித்தூரை மீட்ட பிறகுதான் நான் பெறுவேன்.

ஹமீர்சிங் : சரி, இந்த முறையும் உங்கள் விருப்பப் படியே ஆகட்டும்.

சேனாபதி : இன்னும் சில காலம் பொறுப்பதால் நமக்கு வெற்றி நிச்சயம் கைகூடும்; ராணிதேவியின் திட்டந்தான் இந்த நிலையிலே உகந்ததாகத் தோன்றுகிறது.

ஹமீர்சிங் (சிரித்துக்கொண்டு) : இப்பொழுது எல்லோருக்கும் கமலாதேவியின் பேச்சுத்தான் பிடிக்கிறது. சரி, அப்படியே ஆகட்டும்.

திரை

## காட்சி நான்கு

[கமலாதேவி அரண்மனைப் பூங்காவில் அமர்ந்திருக்கிறாள். பாடினி அருகே அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறாள். மாலை நேரம்.]

**பாடினி:** ராணிபாய், கோட்டை வாயிலைக் காக்கும் வீரர்கள் மகா பொல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

**கமலாதேவி:** ஏன், ஏதாவது தொந்தரவு கொடுத்தார்களா?

**பாடினி:** தொந்தரவொன்றுமில்லை. ஒவ்வொரு தடவை நான் வரும்போதும் அவர்களுக்கு ஒரு பாட்டாவது பாடியாக வேண்டும். இல்லாவிட்டால் விடமாட்டார்கள்.

**கமலாதேவி:** உனது பாடல்கள்தான் இப்பொழுது காயில்வரத்திலே எங்கு பார்த்தாலும் ஒலிக்கின்றன.

**பாடினி:** இங்கு மட்டும் ஒலித்தால் போதுமா? சித்தூரிலே அப்படி ஒலித்தால் அப்பொழுதுதான் எனக்குத் திருப்தியேற்படும்.

**கமலாதேவி:** வெகு விரைவிலே உன் ஆசை நிறைவேறி விடும், கவலைப்படாதே.

**பாடினி:** ராணிபாய், நான் இதுவரை பத்துத் தடவை இங்கு வந்து விட்டேன்.

**கமலாதேவி:** பதினோராவது தடவை நீ இங்கு வந்து என்னைச் சந்திக்க வேண்டிய அவசியமிராது. எனது திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

**பாடினி** (மகிழ்ச்சி பொங்க)**:** அடுத்த முறை சித்தூரிலேயே சந்திக்க முடியுமா?

கமலாதேவி : ஆமாம், சந்தித்தால் சித்தூரிலே சந்திப்போம். இல்லாவிட்டால் நாம் மறுபடியும் இந்த உலகத்திலே சந்திக்கப் போவதில்லை.

பாடினி : இளைய ராணாவுக்கு ஒரு வருஷம் எப்போ முடியப் போகிறது ?

கமலாதேவி (சிரித்துக்கொண்டே) : வெகு விரைவிலே ஆண்டு நிறைவு மங்களகரமாக முடியும்—உனக்கும் நல்ல பரிசு கிடைக்கும்.

பாடினி : சித்தூருக்கு நீங்கள் ராணியாக வந்தால் மக்கள் எல்லோரும் தங்களுக்கே கிரீடம் பரிசாகக் கிடைத்தது போல மகிழ்ச்சியடைவார்கள்.

கமலாதேவி : அந்த மகிழ்ச்சி கிடைக்கும் நாள் நெருங்குகிறது, பாடினி—கவலைப்படாதே. இப்பொழுது ஏதாவது ஒரு பாட்டுப் பாடு.

பாடினி : என்ன பாட்டு வேணும், ராணிமாய் ?

கமலாதேவி : சித்தூரைக் காக்க எத்தனையோ தியாகம் செய்து கடைசியில் தம் உயிரையும் கொடுத்தாரே ராணா லக்ஷ்மணசிங்—அவரைப் பற்றியே பாடு.

பாடினி : [பாட்டு]

வீரரத்ன லக்ஷ்மசிங்கன் எங்கள் மகாராணா
எங்கள் மகாராணா—அவர்
வேலெடுத்து வீசிவந்தால் உலகமெலாம்
நடுங்கும்—உலகமெல்லாம் நடுங்கும்
(வீரரத்ன லக்ஷ்மசிங்கன் எங்கள் மகாராணா-
—எங்கள் மகாராணா)
ஆரவல்லி மலைகளில் வாழ் சிங்கமெனவருவார்
சிங்கமென வருவார்—அவர்.

அலாவுதீனின் கதிகலங்க ஆயிரம் போர் புரிவார்
ஆயிரம் போர் புரிவார்
(வீர ரத்ன லக்ஷ்மசிங்கன் எங்கள்
மகாராணு—எங்கள் மகாராணு)

[ராணு ஹமீர்சிங் வருவதை அவள் கவனிக்கிருள். உடனே பாட்டை நிறுத்துகிருள்.]

ராணிபாய், அதோ ராணு வருகிருர்.

[எழுந்து நின்று வணங்குகிருள்.]

ஹமீர்சிங் : பாட்டு மிக நன்ருக இருக்கிறது.

கமலாதேவி : சித்தூரை மீட்க வேண்டுமென்பதை ஞாபகப்படுத்தியேதான் இவள் இப்பொழுது பாடுவதெல்லாம்.

ஹமீர்சிங் : அடிக்கடி அதை நமக்கு யாராவது ஞாபக படுத்தத்தான் வேண்டியிருக்கிறது. இப்பொழுது அதை நாம் மறந்தே விட்டோமே?—ஆமாம், எதற்காக என்னை இங்கு வரும்படி கூறிஞய் ?

கமலாதேவி : பாடினி, உனது அற்புதமான பாடலை மற்ருெரு சமயம் கேட்கிறேன்.

[பாடினி வணங்கி விடை பெற்றுக் கொள்கிருள்.]

நமது குழந்தைக்கு ஆண்டு நிறைவு நெருங்கப் போகிறதே, அப்த பூர்த்தி விழாக் கொண்டாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமல்லவா ?

ஹமீர்சிங் : இதற்காகவா என்னை அழைத்தாய்? காயில் வரத்தில் எவ்விதமான கொண்டாட்டமும் தடை செய்யப் பட்டிருக்கிறது உனக்குத் தெரியாதா ?

கமலாதேவி : நான் என் தந்தைக்கு இது குறித்துக் கடிதம் அனுப்பினேன். எனது பிறந்த வீட்டில்தான் குழந்தையின் முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் அவர் பதிலே அனுப்பவில்லை.

ஹமீர்சிங் : அனுப்பாவிட்டால் போகிறது. அந்தக் கொண்டாட்டத்தையே நிறுத்தி விடுவோம்.

கமலாதேவி : என் தந்தை அழைக்காவிட்டாலும் நானாகவே சித்தூருக்குப் போக விரும்புகிறேன்.

ஹமீர்சிங் : கல்யாணம் செய்து வந்ததிலிருந்து நீ சித்தூரை நினைக்கவில்லையே ? இப்பொழுது என்ன அப்படி ஆவல் பிறந்துவிட்டது?

கமலாதேவி : இதுவரையிலும் அங்கே போவதற்குத் தகுந்த காரணம் கிடைக்கவில்லை. இப்பொழுது இதை வியாஜமாக வைத்துக்கொண்டு....

ஹமீர்சிங் : சரி, அங்கே போய் என்ன செய்யப் போகிறாய் ?

கமலாதேவி (சிரித்து) : நான் என்னவோ செய்கிறேன்... குழந்தையின் ஆண்டு நிறைவை அங்கு கொண்டாடுவது தானே முறை? நான் சேதியனுப்பும்போது நீங்கள் தயாராகச் சேனைகளுடன் வரவேண்டும்.

ஹமீர்சிங் : நமது வீரர்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள். உன்னுடைய உத்தரவை எதிர்பார்த்துத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கமலாதேவி : உங்கள் உத்தரவைத்தான் அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஹமீர்சிங் (சிரித்துக்கொண்டே) : சரி அப்படியே வைத்துக்கொள்; நான் உன்னுடைய உத்தரவை எதிர் பார்த்திருக்கிறேன்.

கமலாதேவி (சிரித்து): நான்தான் தங்களுக்கு உத்தரவு கொடுத்துவிட்டேனே?

ஹமீர்சிங்: கமலா, என்ன இருந்தாலும் நீ சித்தூருக்குப் போவதை நான் ஆமோதிக்கவில்லை. அழையாதவன் வீட்டில் நுழைவது உனக்குக் கௌரவமல்ல.

கமலாதேவி (கோபமாக): சித்தூர் மால்தேவிற்குச் சொந்தமோ? அது என்னுடைய வீடு, தங்களுடைய வீடு. அலாவுதீனின் பிரதிநிதிக்கு இருக்கிற சொந்தம் அங்கு நமக்கு இல்லாமற் போய்விடவில்லை. ராணு பப்பாதித்தியன் ஏற்படுத்தியது இந்தச் சித்தூர். நாம்தான் அவருடைய பிரதிநிதிகள்.

ஹமீர்சிங்: நீ இப்பொழுது சித்தூருக்கு மட்டும் போகவில்லையே? அந்த மால்தேவின் சோற்றை உண்ணவல்லவா செல்லுகிறாய்? என் குழந்தைக்கும் அந்த அடிமைச் சோற்றை ஊட்டப்போகிறாயா?

கமலாதேவி: ராணு, இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் எனது எண்ணம் கைகூடாது. அதனால் நான் போய்த்தானகவேண்டும். என் தந்தை வீட்டிலேயிருந்து குழந்தைக்கு நான் தண்ணீர்கூடக் கொடுக்கமாட்டேன். அதற்கு வேறு ஏற்பாடு செய்துகொள்ள எனக்குத் தெரியும்.

ஹமீர்சிங்: கமலா, சரி; உன்னிஷ்டம்போலவே செய். இந்த முறை சித்தூரை மீட்காவிட்டால் நான் போர்க்களத்திலிருந்து உயிரோடு மீளமாட்டேன். இது உறுதி.

கமலாதேவி: சித்தூரிலிருந்து ஒற்றர்கள் கொண்டுவந்த சேதிகளையெல்லாம் பார்க்கிறபோது நான் போடுகிற திட்டம் நிச்சயம் வெற்றியடையும். இன்னும் சில நாட்கள் பொறுத்திருங்கள். தகுந்த சமயம் வரப்போகிறது.

**ஹமீர்சிங் :** சரி, உன் விருப்பப்படியே செய். நான் தடை சொல்லவில்லை. உன் திட்டமெல்லாம் எனக்குப் பெரிய புதிராகவே இருக்கிறது.

**கமலாதேவி :** புதிர் ஒன்றுமில்லை. மாளிகைக்குப் போகலாம் வாருங்கள். அங்கே எல்லாவற்றையும் விளக்கிக் கூறுகிறேன்; முதலில் நான் சித்தூருக்குக் குழந்தை கயித்சிங்கோடு செல்லவேண்டும். அதற்கு அப்த பூர்த்தி விழா நல்ல சந்தர்ப்பம்.

[போகிறார்கள்.]

திரை

## காட்சி ஐந்து

[சித்தூரிலே மால்தேவின் மாளிகை. கமலாதேவி ஒரு விசாலமான அறையிலே ஏதோ யோசனை செய்துகொண்டு நிற்கிறாள். மால்தேவ் தற்செயலாக அங்கு வருகிறான். காலை நேரம்.]

**மால்தேவ் :** யார் கமலாவா? எப்பொழுது வந்தாய் ?

**கமலாதேவி :** இப்பொழுதுதான் உங்களுக்குக் கண் தெரிந்ததா? நான் வந்து இரண்டு நாட்களாகியும் என்னை நீங்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே ?

**மால்தேவ் :** நீதான் வந்தது முதல் ஊரெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கிறாயே; கண்ணில் அகப்பட்டால்தானே பேசுவதற்கு ?

**கமலாதேவி :** ஆஹா, காரணம் ரொம்ப நன்றாக இருக்கிறது. சரி, அது போகிறது. நான் அனுப்பிய கடிதத்திற்கு ஏன் பதிலே தரவில்லை ?

**மால்தேவ் :** என்ன தோரணையாகக் கேள்வி போடுகிறுயே? காயில்வரத்துத் தண்ணீரைக் குடித்தால் இந்தக் குணம் உண்டாகும்போலிருக்கிறது.

**கமலாதேவி** (கோபமாக) **:** குழந்தையின் ஆண்டு நிறைவுக்கு அழைக்கக்கூட உங்களுக்கு வகையில்லை. என்னை அழைத்தால் உங்கள் எஜமான் அலாவுதீன் தண்டித்துவிடுவாரோ ?

**மால்தேவ் :** அவரைப்பற்றி எதற்காகப் பேசுகிறுய்? சித்தூரிலே நான்தான் எஜமான்.

**கமலாதேவி** (வெறுப்போடு)**:** அந்நியனுடைய காலுக்குச் சேவகம் பண்ணி வாழ்வதைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ள வேண்டாம்.

**மால்தேவ் :** என்னுடைய சேவகம் அவ்வளவு கேவலமாகத் தோன்றினுல் எதற்காக இங்கே வந்தாய்?

**கமலாதேவி :** 'ஆண்டுநிறைவு கொண்டாடாமல் ஊரெல்லாம் சிரிக்கக்கூடாதே என்பதற்குத்தான் வந்தேன். அந்நியனுக்கு அடிமையாக இருந்தாலும் இன்னும் என் தந்தை தமது மகளை மறந்துவிடவில்லை என்று மக்கள் நம்பவேண்டாமா ?

**மால்தேவ்** (கோபமாக) **:** ஓகோ, விதவை பெற்ற மகனுக்கு ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்வேறு கேடா ?

**கமலாதேவி :** என்ன சொன்னீர்கள் ? இந்த வார்த்தையைச் சொல்லவும் உங்களுக்கு நாவிருக்கிறதா? என்னை விதவையாக்கியது யார்? உங்களுடைய வஞ்சகத்திற்கும் தந்திரத்திற்கும் என்னைப் பலிகொடுத்துவிட்டு இப்படியும் பேச நெஞ்சம் துணிகின்றதா?

**மால்தேவ் :** சரிசரி, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டுப்போ. நான் மதாரியா நாட்டு மீர்களை

எதிர்த்துச் சண்டைக்குப் புறப்படுகிற இந்தச் சமயத்தில் என் மனத்தைப் புண்படுத்தாதே.

கமலாதேவி : சித்தூரை அலாவுதீனுக்கு அடிமையாக்கி வைத்திருப்பது போதாதா? மதாரியாவையும் அடிமைப் படுத்தி அவனை மகிழ்விக்கப் புறப்படுகிறீர்களோ?

மால்தேவ் : அதைப்பற்றி உன்னை நான் யோசனை கேட்க வரவில்லை. நீ எப்பொழுது காயில்வரம் திரும்புகிறாய் ?

கமலாதேவி : நல்ல கேள்வி இது! நான் திரும்பிப்போகப் போகிறதே இல்லை. என் தாய் உயிரோடிருந்தால் எனக்கு இப்படியும் அவமானம் நடக்குமா ?

மால்தேவ் : இந்த முறையிடெல்லாம் எனக்குத் தெரியும். நீ வந்த காரியத்தை முடித்துக்கொண்டு காயில்வரம் போய்ச் சேர்.

கமலாதேவி (அழுகின்ற பாவனையில்) : காயில்வரத்தில் இனி எனக்கு என்ன வேலையிருக்கிறது? நான் அங்கு போனது முதல் மக்களெல்லாம் என்னைத் தூற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையிலும் ராணாவின் அன்பாவது எனக்கிருந்தது. இப்பொழுது அதுவுமில்லை.

மால்தேவ் : ஏன், அந்த ஹமீர்சிங் உன்னிடம் ரொம்பவும் பிரியமாக இருந்ததாகக் கேள்விப்பட்டேனே ?

கமலாதேவி : பிரியமாகத்தான் இருந்தார். எல்லோரையும் விரோதம் செய்துகொண்டு என்னிடம் அன்புகாட்டினார். ஆனால் குழந்தையின் அப்த பூர்த்திக்கு இங்கு வருவதற்காக அநுமதி கேட்டேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. சித்தூருக்குப் போனால் மறுபடியும் காயில்வரத்தில் காலெடுத்து வைக்கக்கூடாது என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

மால்தேவ் (மகிழ்ச்சியோடு) : அப்படியா சொன்னான்? அப்படியானால் நீ இங்கேயே தங்கிவிடு. சுல்தான் அலாவுதீனிடம் சொல்லி எனக்குப் பின் உன் மகனே சித்தூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு வேண்டிய சம்மதத்தைப் பெற்றுவிடுகிறேன்.

கமலாதேவி : நானிங்கிருக்கும் வரையில் ராணா ஹமீர் சிங் சித்தூரின் மேல் படையெடுத்து வரவும் இனி முடியாது.

மால்தேவ் : ஏதனால் ?

கமலாதேவி : இனிமேல் அவர் போருக்குப் புறப்பட்டால் என்மீதிருக்கும் ஆசையால் என்னை மீட்பதற்காகவே அப்படிப் புறப்படுவதாக மக்களும் போர்வீரர்களும் நினைப்பார்கள். அதனால் அவர்கள் போரில் கலந்துகொள்ள விரும்பமாட்டார்கள்.

மால்தேவ் (மகிழ்ச்சியோடு) : கமலா, நான் போட்ட திட்டம் எப்படியோ ஒரு வகையில் எதிர்பாராதவிதமாக வெற்றிபெற்றுவிட்டது. இனி எனக்குக் கவலையில்லை. நீ இங்கேயே தங்கிவிடலாம்.

கமலாதேவி : எனக்கு இங்கேயே தங்கியிருக்க விருப்பமில்லை. குழந்தையின் ஆண்டு நிறைவு விழாவை முடித்துக் கொண்டு நான் எங்கேயாவது போய்விடுகிறேன்.

மால்தேவ் : கமலா, இப்படியெல்லாம் நீ கோபித்துக் கொள்ளக்கூடாது. இதைப் பற்றியெல்லாம் நான் மதாரியாவிலிருந்து திரும்பிய பிறகு அமைதியாக யோசித்துக்கொள்வோம். போர் வீரர்களெல்லாம் புறப்படச் சித்தமாயிருக்கிறார்கள். நான் போய் வருகிறேன்.

உனக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் கவனிக்கும்படி உத்திரவிட்டுப் போகிறேன்.

[புறப்படுகிறான்.]

திரை

## காட்சி ஆறு

[சித்தூர்க் கோட்டைச் சுவரின் அருகே போர் வீரர்கள் கூடும் இடம். இரவு ஒன்பது மணியிருக்கும். பல வீரர்கள் தரையில் அமர்ந்து கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கமலாதேவி அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறாள்.]

கமலாதேவி : வீரர்களே, இவ்வளவுதான் சித்தூரின் பழம்பெருமை என்று எண்ணாதீர்கள். அதன் பெருமை முழுவதையும் ஒரே சமயத்தில் சரியானபடி எடுத்துக் கூற முடியாது. உங்களுக்கும் அதன் பெருமை முன்னமேயே தெரிந்திருக்கும். பப்பாதித்தியன் என்று சொல்லப் படும் ராணா பூப்சிங் சித்தூரை ரஜபுத்திரர்களின் தனிப்பெருமைக்கு உறைவிடமாகச் செய்தார். சலீம் என்ற அந்நியன் படையெடுத்தபோது அவனை கஜினி வரையில் துரத்திச் சென்று வெற்றிமாலை பூண்டார். அவர் காத்த நாடு இன்று அந்நியனுக்கு அடிமையாகக் கிடப்பது ஒவ்வொரு ரஜபுத்திர வீரனுக்கும் அவமான மாகும். நீங்கள் ரஜபுத்திர வீரர் என்று சொல்லிக் கொண்டு அந்நியனுக்குச் சேவகம் புரிவதைவிட உங்களுக்கு இழிவு ஒன்றுமில்லை ...ரஜபுத்திரனுடைய வீரத்திற்கும் புகழுக்கும் சின்னமாக விளங்குவது சித்தூர்—அது அடிமையாகக் கிடப்பது நமக்குப் பெரிய அபகீர்த்தியாகும்...

முதல் சித்தூர் வீரன் : ஆமாம், நீங்கள் கூறுகின்ற வார்த்தைகளைக் கேட்ட பிறகு நாம் எவ்வளவு கேவலமான நிலைமையை அடைந்துவிட்டோமென்று நன்ருகத் தெரிகிறது. இதிலிருந்து மீள்வதற்கு நாங்கள் என்ன செய்யவும் தயார்...ஆனல் உங்கள் தந்தை...

கமலாதேவி : என் தந்தையைப் பற்றி நீங்கள் கவலைப் படக்கூடாது...ராணு பப்பாதித்தியனின் வம்சத்தவர்களே இந்த நாட்டிற்கு உரியவர்கள். அவர்கள் ஆளவேண்டிய இடத்திலே ஓர் அந்நியன் ஆதிக்கம் செலுத்துவதை நாம் இனியும் பொறுத்துக்கொண்டிருக்கக்கூடாது. ரஜபுத்திரனுடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டுமானல் சித்தூரிலே பத்மினிதேவியின் சந்ததியார்கள் மீண்டும் ஆட்சி நடத்தவேண்டும்.

முதல் சித்தூர் வீரன் : ஆமாம்; அதுதான் நியாயம்.

இரண்டாம் சித்தூர் வீரன் : ஆமாம்—அதுவே நம் பெருமையை நிலைநாட்ட வழி.

வீரர்கள் பலர் : நீங்கள் கூறுவதை நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிருேம்.

கமலாதேவி : வீரர்களே, எனது வார்த்தைகளை நீங்கள் ஆமோதித்தது கண்டு எனக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டாகிறது. ஒரு பெண்ணின் பொருட்டாக லக்ஷ்மண சிங் இந்த நாட்டை இழந்தார்-தமது உயிரையும் மைந்தர் பதினெரு பேரையும் ஆயிரக்கணக்கான வீரர்களையும் தியாகம் பண்ணினர். நான் கூறுவதுபோல நீங்கள் நடக்கச் சம்மதித்தீர்களானல் மறுபடியும் ஒரு பெண்ணினலேயே சித்தூர் அந்நியனிடமிருந்து விடுபட்ட பெருமை ஏற்படும்.

வீரர்கள் (சேர்ந்து) : நீங்கள் என்ன சொன்னலும் அதன்படி நடக்க அனைவரும் தயாராக இருக்கிருேம்.

கமலாதேவி : சந்தோஷம். உங்களுடைய சேனைத் தலைவரும் எனது இஷ்டப்படி நடக்கச் சம்மதித்திருக்கிறார்.

முதல் சித்தூர் வீரன் : ஆனால் நாங்கள் ஒருசிலர்தானே இருக்கிறோம்? மற்றவர்களெல்லாம் ராஜப் பிரதிநிதியோடு மதாரியாவை நோக்கிப் போருக்குச் சென்றுவிட்டார்களே?

கமலாதேவி : வீரர்களே, நான் உங்களை இப்பொழுது போரிடும்படி அழைக்கவில்லை. சித்தூரின் நியாயமான உரிமையாளரைக் கோட்டைக்குள் அன்போடு வரவிட வேண்டும் என்றுதான் கூறுகிறேன். அவரை எதிர்த்து நீங்கள் போரிடக்கூடாது என்பது எனதுவேண்டுகோள்.

இரண்டாம் சித்தூர் வீரன் : இங்கு கோட்டையைப் பாதுகாக்கத் தங்கியிருக்கும் வீரர்களுக்குத் தலைவராக இருக்கிறாரே, அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி நாங்கள் நடக்கச் சித்தமாக இருக்கிறோம்.

கமலாதேவி: அது போதும்; அவ்வளவுதான் நான் வேண்டுவது...நான் காயில்வரத்திற்குச் சேதி அனுப்பியிருக்கிறேன். உங்களுடைய ராணா நாளை வந்து சேருவார்...நாளையே இந்த நாட்டிற்கு ஏற்பட்ட பழி தீரப் போகிறது.

பல வீரர்கள் : ராணா ஹமீர்சிங்கிற்கு ஜே!...

கமலாதேவி : வீரர்களே, இப்பொழுதே நீங்கள் ஆரவாரம் செய்யாதிர்கள்...உற்சாக மிகுதியினால் நமது நோக்கம் நிறைவேறாது தடைப்படக்கூடாது. நான் வகுத்திருக்கும் திட்டமெல்லாம் அமைதியாக நடைபெற வேண்டும். இப்பொழுது அனைவரும் அவரவர்கள் கடமையைச் செய்யப் புறப்படுங்கள். உங்கள் தலைவர் ஆணையிடுவது போல நாளைக்கு நடக்கவேண்டும்.

திரை

## காட்சி ஏழு

[சித்தூர் அரண்மனையில் ஒரு மண்டபம். ஹமீர்சிங்கும் கமலாதேவியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

**ஹமீர்சிங் :** கமலா, சித்தூர் ஒருவகையான ஆர்ப்பாட்டமுமின்றி நம் வசமாகிவிட்டதே?

**கமலாதேவி (மகிழ்ச்சியோடு) :** என்னை ஒரு வகையான ஆர்ப்பாட்டமுமின்றித்தானே அன்று கைப்பற்றினீர்கள்? அதே போல இன்று சித்தூரும் உங்களுக்குக் கிடைத்துவிட்டது.

**ஹமீர்சிங் :** என்ன இருந்தாலும் எனக்கு இது பிடிக்கவில்லை... இது கோழைகள் செய்கையென்று எனக்குப் படுகிறது.

**கமலாதேவி :** உங்களுடைய சொந்த உடைமையை எடுத்துக் கொள்வதிலே கோழைத்தனம் என்ன இருக்கிறது?

**ஹமீர்சிங் :** சண்டை செய்து எதிரிகளை வென்று உள்ளே நுழைந்திருந்தால் எனக்குத் திருப்தியாக இருந்திருக்கும்.

**கமலாதேவி :** ஏன் இப்பொழுதுகூடச் சண்டை நடக்கவில்லையா?

**ஹமீர்சிங் :** அது என்ன சண்டை? ஏதோ சில நூறு வீரர்கள் கோட்டையில் இருந்தார்கள். அவர்களும் சரியானபடி எதிர்த்து நிற்கவில்லை. ஒருவேளை முன்னதாகவே நீ அவர்களை உன் வசப்படுத்தி விட்டாயோ என்னவோ?

**கமலாதேவி (சிரித்துக்கொண்டே) :** உங்கள் வீரத்தையெல்லாம் காட்டச் சீக்கிரம் சந்தர்ப்பம் வரப்போகிறது.

அதற்குள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? என் தந்தை அலாவுதீனிடம் விஷயத்தைக்கூறி ஒரு பெரிய சேனையோடு வரப்போகிறார்.

ஹமீர்சிங் : அவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொண்டால்தான் என் மனம் நிம்மதியடையும்.

கமலாதேவி : நிச்சயம் அந்தப் போர் வரப் போகிறது; அதற்காக நமது சேனையை நாம் உடனே தயார் செய்ய வேண்டும்.

ஹமீர்சிங் : சேனாபதி எங்கே?

கமலாதேவி : சித்தூர்க் கோட்டையின் நிலைமையைப் பார்வையிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வர அவர் சென்றிருக்கிறார்.

ஹமீர்சிங் : ஓகோ, அதற்கும் ஏற்பாடு செய்துவிட்டாயா? நானும் நேரிற் சென்று வேண்டியதையெல்லாம் கவனிக்கிறேன். சித்தூர் வீரர்களின் நிலைமை என்ன?

கமலாதேவி : அவர்களெல்லாம் நமது சேனாபதியின் கீழிருந்து கடமையாற்றுவார்கள். அவர்களைப்பற்றிக் கவலையில்லை. அலாவுதீனின் சேனையை எதிர்க்கத்தான் நாம் தயாராகவேண்டும்.

ஹமீர்சிங் : அலாவுதீன் சேனையா?

கமலாதேவி : ஆமாம்; என் தந்தை அலாவுதீன் உதவியையும் தேடிக்கொண்டேதான் வருவார். ஆனால் அவருக்குக் கீழிருக்கும் சித்தூர் வீரர்கள் நம்மை எதிர்த்துப் போரிட மாட்டார்கள். சமயம் வந்ததும் அலாவுதீன் சேனையையே தாக்குவார்கள்.

ஹமீர்சிங் : கமலா, இத்தனை சூழ்ச்சியையும் நீ எங்கே கற்றுக் கொண்டாய்?

கமலாதேவி : என் தந்தையின் சூழ்ச்சியிலே ஓரளவா வது எனக்குத் தெரிந்திருக்காதா?

ஹமீர்சிங் : உன் தந்தைக்கு நீ சரியான மகள்தான். இப் பொழுது நான் சேனைபதியைப் பார்த்து வருகிறேன். [புறப்படுகிறான்.]

திரை

## காட்சி எட்டு

[டெல்லியிலே சுல்தான் அலாவுதீன் ஆட்சி மண்ட பம். அலாவுதீன் அரியணையில் வீற்றிருக்கிறார். மால்தேவ் முன்னால் நின்று பேசிக் கொண்டிருக்கிறான்.]

அலாவுதீன் : மால்தேவ், மதாரியா நாட்டுப் போர் என்ன ஆயிற்று? எதற்காக இப்பொழுது அவசரமாக இங்கு வந்திருக்கிறாய்?

மால்தேவ் : நான் மதாரியாப் போரைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு இங்கு வரவேண்டியதாய்விட்டது.

அலாவுதீன்: அப்படி என்ன விசேஷம்? சித்தூரில் எல் லாம் ஒழுங்காகத்தானே இருக்கிறது?

மால்தேவ் : நான் மதாரியா நாட்டை நோக்கிப் படை யோடு சென்றிருந்த சமயம் பார்த்து அந்த ஹமீர்சிங் சித் தூருக்குள்ளே நுழைந்துவிட்டான்.

அலாவுதீன் (ஆச்சரியத்தோடு) : என்ன? அதெப்படி முடி யும்? சித்தூரைக் காப்பதற்கும் வீரர்கள் இருந்தார்க ளல்லவா?

மால்தேவ் : அவர்களையெல்லாம் அந்தப் பெண் எப்படியோ வசப்படுத்தி விட்டாள்.

அலாவுதீன் : எந்தப் பெண் ?

மால்தேவ் : என் மகள்தான்—கமலா.

அலாவுதீன் : அவள் எப்படி உள்ளே வந்தாள் ?

மால்தேவ் : மகனுக்கு ஆண்டு நிறைவு என்று கூறிக்கொண்டு நல்ல சமயம் பார்த்து அவள் அங்கு வந்திருந்தாள்.

அலாவுதீன் (கோபமாக) : மால்தேவ், நீ கூறுவதைப் பார்த்தால் ஏதோ பெரிய சூழ்ச்சி நடந்திருக்கிறது...நீயும் அதில் சேர்ந்திருப்பாய் போலத் தோன்றுகிறது...இங்கு வந்து பசப்பு மொழி பேசி என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?

மால்தேவ் : சக்ரவர்த்தியே, நான் என்றும் தங்களுக்குத் துரோகம் செய்ய நினைக்கமாட்டேன்.

அலாவுதீன் : என்னைக் கேட்காது நீ உன் மகளை ஹமீர் சிங்குக்கு மணம் செய்து கொடுத்த போதே சந்தேகப்பட்டேன்...அப்பொழுதும் விதவையென்று சொல்லி என்னை ஏமாற்றியிருக்கிறாய்...ஹமீர்சிங்கை அவமானப்படுத்துவதாகக் கூறி நாட்டையே அவனுக்குக் கிடைக்கச் சூழ்ச்சி செய்திருக்கிறாய்.

மால்தேவ் : நான் மீண்டும் சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் யாதொரு வஞ்சனையும் நினைக்கவில்லை... எனது சூழ்ச்சியையே பயன்படுத்திக்கொண்டு அவர்கள் என்னை ஏமாற்றியிருக்கிறார்கள்.

அலாவுதீன் (கோபத்தோடு): நீ சொல்லுவதை நான் நம்ப முடியாது...யாரடா அங்கே? இந்த வஞ்சகனைக் கைது

செய்து, சிறையில் தள்ளுங்கள்...டெல்லியிலே சிலபேர் எனக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதுபோல நீயும் சித்தூரிலே சூழ்ச்சி செய்கிறாயா? டேய், இவனை உடனே கைது செய்யுங்கள்.

மால்தேவ் (பதற்றத்தோடு) பாதுஷா, இப்பொழுது ஒரு பெரிய சேனையை அனுப்புங்கள். நான் அந்த ஹமீர் சிங்கை வெட்டி வீழ்த்திவிட்டு வந்து என்னுடைய ராஜ விசுவாசத்தை நிரூபிக்கிறேன்...சித்தூரை மறுபடியும் தங்கள் வசமாக்குகிறேன்...இவ்விதம் நடைபெறுமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை...சேனை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளவே நான் இங்கு வந்தேன்.

அலாவுதீன் : நீ கூறுவது நிஜந்தானா ?

மால்தேவ் : பாதுஷா, இனிமேல் நான் வார்த்தைகளால் என் விசுவாசத்தை மெய்ப்பிக்க முடியாது; மெய்ப்பிக்கவும் விரும்பவில்லை. சித்தூரை மீட்டுக் கொண்டுவந்து அதைச் செய்கையிலே நிரூபிக்கிறேன்,

[மண்டியிட்டுப் பணிகிறான்.]

அலாவுதீன் : அதுதான் சரியான வழி. உடனே புறப்படு. சேனையை நான் அனுப்பி வைக்கிறேன்...மால்தேவ்! எதற்கும் நீ என் சேனாபதியின் கண்காணிப்பிலேயே இருக்கவேண்டும். சித்தூரை மீட்கும் வரையில் நான் உன்னை நம்ப முடியாது.

மால்தேவ் : என் மகள் கமலாதேவிக்கு இத்தனை சூழ்ச்சி தெரியுமென்று நான் நினைக்கவே இல்லை. அவளையும் அந்த ஹமீர்சிங்கையும் சிறைப் பிடித்து வந்து தங்கள் முன்னால் நிறுத்தித் தங்களிடம் எனக்குள்ள மாறாத விசு

வாசத்தை எல்லோருக்கும் தெரியும்படி செய்கிறேன். பாதுஷா, போய் வருகிறேன். விடையளியுங்கள்.

[மறுபடியும் மண்டியிட்டுப் பணிகிருன்.]

திரை

## காட்சி ஒன்பது

[போர் ஆரவாரம் கேட்கிறது. சித்தூர்க் கோட்டைச் சுவருக்கு முன்னுல் வீரர்களுடன் கமலாதேவி பேசிக் கொண்டிருக்கிருள்.]

**கமலாதேவி :** வீரர்களே, உங்களுடைய ஆண்மை முழுவதையும் காட்ட நல்ல சமயம் வந்துவிட்டது. சித்தூர் நம்முடைய கண்மணி போன்றது. அதைக் காக்க வேண்டியது நமது கடமை. ரஜபுத்திரனுக்கு உயிர் பெரிதல்ல. அவனுடைய தேசமே பெரிது. இது வரையிலே இந்தக் கோட்டையை அந்நியனுக்காக நீங்கள் காத்தீர்கள். அதிலே உங்கள் மனம் அரைகுறையாகவே ஈடுபட்டிருந்ததை நான் அறிவேன்; இப்பொழுது இதன் உண்மையான ராணுவுக்காக நீங்கள் இதைக் காக்கிறீர்கள். மால்தேவ் எனது தந்தையாஞலும் அவர் அந்நியனுக்கு அடிமை. அவருக்காக நீங்கள் பரிவு காட்டக்கூடாது. சித்தூரின் பகைவர் யாராயிருந்தாலும் சரி, எதிர்த்து மோதி மிதித் தெறியுங்கள். இந்தக் கோட்டையின் காவல் தெய்வம் பவானிதேவி உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாள். ஜேய் பவானி!

**வீரர்கள் :** தேவி, உங்கள் ஆணைப்படியே போர் செய்வோம். எங்கள் உயிருள்ள மட்டும் இனி அந்நியன் உள்ளே நுழைய முடியாது. ஜேய் பவானி!

[மறுபடியும் போரோசை கேட்கிறது; வீரர்கள் கோஷமிட்டு வாளை வீசிப் போகிறார்கள். ஹமீர்சிங் வாளேந்தி வேகமாக வருகிறான். வலது கையிலே ஒரு கட்டிருக்கிறது.]

**கமலாதேவி :** அதோ உங்கள் ராணாவும் வந்து விட்டார். ராணா, மேற்கு முனையிலே போர் எப்படி நடக்கிறது?

**ஹமீர்சிங் :** நமது வீரர்கள் அற்புதமாகப் போரிடுகிறார்கள். இதற்குள்ளே அலாவுதீனின் வீரர்களில் நாற்பதினாயிரம் பேர் அந்தப் பகுதியில் பலியாகி விட்டார்கள்.

**கமலாதேவி (திடுக்கிட்டு) :** ராணா, உங்கள் வலதுகையில் என்ன கட்டு?

**ஹமீர்சிங் :** அது ஒன்றுமில்லை. ஏதோ ஓர் அம்பு பட்டு விட்டது.

**கமலாதேவி :** காயம் அதிகமாகிவிட்டதா? ரத்தம் கொட்டியிருக்கிறதே?

**ஹமீர்சிங் :** அதெல்லாம் ஒன்றுமில்லை; இப்போ அதைப் பற்றி என்ன பேச்சு? நீ வடக்கு முனையைக் பார்த்து விட்டுவா — நான் கோட்டை வாசலுக்குச் சென்று வருகிறேன்....அங்கே இப்பொழுது சண்டை மும்முரமாக நடக்கிறது. மால்தேவ் அங்கே தன் கடைசித் தாக்குதலைத் தானே நடத்துகிறான். சாந்தசிங் அங்கே போரிடுகிறான். அவனுக்குத் துணையாக நான் போகவேண்டும்.

[வீரர்களின் ஆரவாரம். ஹமீர்சிங் கோட்டை வாசலை நோக்கி விரைந்து செல்கிறான். சேனாபதி வருகிறார்.]

கமலாதேவி : சேனாபதி, நிலைமை எப்படி இருக்கிறது?

சேனாபதி : இன்னும் சில நாழிகையில் அலாவுதீனின் சேனை சின்னாபின்னமாகிவிடும். கோட்டைக்கு வெளியி லுள்ள நமது சித்தூர் வீரர்களும் டெல்லி சேனையை எதிர்த்துத் தாக்கத் தொடங்கிவிட்டார்கள். ராணாவின் மாமா சந்தாரா தலைவருடைய சேனையும் வந்து சேர்ந்து விட்டது.

கமலாதேவி : உங்கள் ராணா கோட்டை வாசலுக்குப் போயிருக்கிறார். அவருக்கு உதவியாக நீங்களும்....

சேனாபதி : ராணா அங்கேயா செல்லுகிறார்? கோட் டைக் கதவுகளைத் திறந்து வெளியேறிச் சண்டையிட வேண்டுமென்று அவர் துடித்துக்கொண்டிருக்கிறார். அவர் பேச்சிலிருந்து நான் அதைத் தெரிந்துகொண்டேன்.

கமலாதேவி : அதற்கு இப்பொழுது அவசியமில்லையே ?

சேனாபதி : அவசியமில்லைதான். ஆனால் ராணாவுக்கு அதிலேதான் பிரியம். அலாவுதீனின் சேனையோடு நேருக்கு நேராகக் கைகலக்காவிட்டால் அவர் மனம் சாந்தியடையாது போலிருக்கிறது.

கமலாதேவி : சேனாபதி, நீங்கள் உடனே சென்று அவருக்குப் பக்கத் துணையாக நில்லுங்கள். வேறு ஏற்பாடுகளையும் கவனியுங்கள்.

[சேனாபதி புறப்படுகிறார். கமலா தேவியின் முகத்திலே கவலைக் குறி படர்கிறது. தானும் கோட்டை வாயிலை நோக்கிப் புறப்பட அடியெடுத்து வைக் கிறாள். ராணா ஹமீர் சிங்கிற்கு. ஜே, ஜே என்ற ஆரவாரம்.

ஓங்கிக் கேட்கிறது. கமலாதேவி யின் முகத்திலே புன்னகை அரும்புகிறது. தெய்வத்தை நினைந்து கையெடுத்துக் கும்பிடு கிறாள்.]

திரை

## காட்சி பத்து

[சித்தூர்க் கோட்டையில் ஒரு மண்டபம். சேனாபதியும் மந்திரியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

**சேனாபதி :** மந்திரி, இன்றுதான் என் மனம் நிம்மதி அடைந்தது. ராணா அஜேசிங்கின் காலத்திலேயே நிறை வேற்றவேண்டிய கடமையை இன்றாவது என்னால் ஒருவாறு நிறைவேற்ற முடிந்தது.

**மந்திரி :** நீங்கள் ஒப்பற்ற சேனாபதி என்பதை நிரூ பித்துவிட்டீர்கள். கடைசி விநாடியிலே நீங்கள் வந்திரா விட்டால் ராணா ஹமீர்சிங்கின் உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கும்.

**சேனாபதி :** எல்லாம் கமலாதேவியின் முன்னெச்சரிக்கை யால் தான் நடந்தது. கமலாதேவி சொல்லாவிட்டால் நான் கோட்டை வாயிலுக்கு வந்திருக்க மாட்டேன்.

**மந்திரி :** அந்த மால்தேவ் என்னவானான் ?

**சேனாபதி :** போர்க்களத்திலேயே மாண்டு போனான் பாவம்...ராணி கமலாதேவி வருத்தப்படுவார்கள்.

**மந்திரி :** ஆமாம், என்ன இருந்தாலும் தந்தையல்லவா?

சேனாபதி : ராணா எப்பொழுது முடி சூட்டிக்கொள்ளப் போகிறார்?

மந்திரி : நாளையே நடைபெற ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். ராணாவும் கமலாதேவியும் தீர்மானிக்கிறபடி எப்பொழுது வேண்டுமானாலும் நடக்க எல்லாம் ஆயத்தமாக இருக்கின்றன.

சேனாபதி : அதோ, ராணாவும் ராணியும் வருகிறார்கள்.

[ஹமீர்சிங்கும் கமலாதேவியும், வருகிறார்கள். ஹமீர்சிங்கின் வலக் கையில் கட்டிருக்கிறது. அவர்கள் முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. மந்திரியும் சேனாபதியும் அவர்களைப் பணிகிறார்கள். 'ராணா ஹமீர்சிங்குக்கு ஜே, கமலாதேவிக்கு ஜே' என்ற முழக்கம் வெளியிலே கேட்கிறது.]

திரை